கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

33
OF THE
20
33

செய்திகள்

உயர்நிலைப் பள்ளிகளின் ஆண்டுவிழாக்கள்

சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளியின் 101-ஆவது ஸ்ரீ து. சுப்பிரமணிய ராஜா, எம். எல். ஏ. அவர்கள் தலை பெற்றது. தலைமையாசிரியர் ஆர். நாராயணன் சேர்வை கூறினர். பாட்டு, பேச்சு, நடிப்பு இவற்றில் பள்ளி மாணவர்க கொண்டு பரிசுகளும் பெற்றார்கள்.

ராமநாதபுரம் மாவட்டக் கழக மகளிர் உயர்நிலைப் பள்ளியி ஆவது ஆண்டுவிழா ஸ்ரீ தோத்தாத்ரி ஐயங்காரவர்கள் தலைமையில் பெற்றது. மாணவியரின் நடனம், பாட்டு முதலியனவும் பெற்றன.

கோபாலபுரம் ஹைஸ்கூல் ஆரம்பப் பள்ளிகளின் ஆண்டுவிழா இலாகா காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள் தலை நடைபெற்றது. தலைமையாசிரியர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஆண்டு அறி வாசித்தார்.

நன்னிலம் மாவட்ட உயர்நிலைப் பள்ளியின் மாணவர் இல மன்றத்தின் ஆண்டுவிழா ஸ்ரீ மருதவாணம் பிள்ளை அவர்கள் தலைமை நடைபெற்றது. தலைமையாசிரியர் ஸ்ரீ கே. வேங்கடராமன் அவர்கள அனைவரையும் வரவேற்றார்.

ராணிப்பேட்டை மாவட்ட உயர் நிலைப்பள்ளியின் ஆண்டு விழா ஸ்ரீ பஞ்சாட்சரம் செட்டியாரின் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் நன்றி கூறினர்.

திருச்செந்தூர் ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா வும் விளையாட்டுப் போட்டிகளும் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ கே. ரா சுப்பு ரெட்டியார், எம் எல் ஏ. தலைமையில் நடைபெற்றன. தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்று நன்றியுரை கூறினர்.

பள்ளி ஆண்டு விழா

மாம்பலம் ஸ்ரீ சாரதா உயர்தர ஆரம்பப் பாடசாலையின் 21-ஆவது ஆண்டு விழா பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் தலைமையில் நடைபெற் றது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழி களில் சொல் வளம் நிகழ்த்தியபின் பெண்கள் நடனம், நாடகம் இவற்றை நடித்துக் காட்டினர்கள். பிள்ளைகள் தமிழிலும் தெலுங்கிலும் நடைபெற்ற நாடகங்களில் பங்குகொண்டனர்.

ஸ்ரீ வேங்கடநிவாஸம் ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் மூன்றும் ஆண்டு விழா மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இலக்கிய மன்றத்தின் நிகழ்ச்சிகள் கண்ணன் ஆசிரியர் ஸ்ரீ ஆர்வி அவர்கள் தலைமை யில் நடைபெற்றன.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, வள்ளலார் மாணவர் இல்லங் களின் 41-ஆம் ஆண்டு விழா டிபுடி கலெக்டர் ஸ்ரீ சி. எஸ். பவானிசங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வர்த்தகப் பிரமுகர் ஸ்ரீ பெ. மருதப்பிள்ளை மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர்கள். ஸ்ரீ வா. மாசிலாமணி முதலியார் யாவருக்கும் நன்றி கூறினர்.

அணுச் சக்தி கடிகாரம்

வாயு அணுக்களைக் கொண்டு விநாடிக்கு 24 பிலியன் ஊசலாடும் கடிகாரம் ஒன்றை சுவிட்ஜர்லாந்து நாட்டில் தயாரித்திரு கிறர்கள். இது மற்றக் கடிகாரங்களைவிட நூறு மடங்கு நேர்மை நுட்ப முடையது.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 9

1 - 5 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
ஸினிரமா	..	3
பிரார்த்தனை	..	6
துப்பறியும் மோகன்	..	7
சரியான காவல்	..	13
மலைச் சாரலிலே!	..	18
போலிச் சாமியார்	..	23
கவியரங்கம்	..	28
அந்தச் சிலை	..	29
நீங்களும் நானும்	..	35
தபால் பெட்டி	..	39

அட்டைப் படம்: போட்டோ, N. ராமகிருஷ்ண

செய்திகள் - 2-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

பலூன் ஊதி ஊதி......

211807
N52:8 . 9-12

குழந்தைகளே!

இந்த இதழ் வெளிவரும்போது உங்களுக்குப் பெரும்பாலும் விடுமுறை விடப்பட்டிருக்கும். நீங்கள் எல்லாரும் விடுதலையடைந்த பட்சிகள் போல உல்லாசமாக இருப்பீர்கள். வெயிலின் கடுமையைக்கூட லட்சியம் செய்யாமல் கொம்மாளமாக இருப்பீர்கள். பரீட்சைத் தொல்லை முடிந்து மேல்வகுப்புக்குப் போகிற நம்பிக்கையோடு ஆடிப் பாடி மகிழ்வீர்கள். அந்த மகிழ்ச்சியை யெல்லாம் என்மீது சுமத்தப் போகிறீர்கள் என்பதும் எனக்கு நன்ருகத் தெரியும். நான் உங்களுடைய தபால்களுக்காகவே என் மேஜையைக் காலி செய்து வைத்திருக்கிறேன். பழகிப் போய்விட்டதால் நான் இதற்கெல்லாம் இனி மலைக்கப் போவதில்லை. எவ்வளவு எழுதியனுப்பினுலும் சரியே.

இந்த விடுமுறையை நீங்கள் எப்படிக் கழிக்கப் போகிறீர்கள் என்பதுதான் என் கேள்வி. இந்த நாட்களை எவ்வளவு உபயோகமாகக் கழிக்க முடியுமோ அவ்வளவு உபயோகமாக்கிக்கொள்ள வேண்டும். உங்களில் சித்திரம் வரைவதில் ஆர்வம் உள்ளவர்களுக்காக இந்த இதழில் ஒரு போட்டி வெளியாகி யிருக்கிறது. போட்டி என்று ஒரு வாய்ப்பு ஏற்படுத்திஞல்தான் உங்களுக்கு அதில் பங்கு கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் உண்டாகிறது. மற்றச் சமயங்களில் நீங்கள் வரைவதும் இல்லை; அதை வெளியிட முடிவதும் இல்லை. ஆகவே ஆசையும் ஆர்வமும் உள்ள எல்லாரும் இதில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

இந்தச் சித்திரப் போட்டியில் கண்ணன் அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காரணம் தொடர்ந்து கண்ணன் படிக்கிறவர்களுக்கு ஒரு பயிற்சியும் ஊக்கமும் தரவேண்டும் என்பதுதான். மற்றவர்களையும் சேர்த்துக்கொள்வது என்ருல் இன்னும் விரிவாக இந்தப் போட்டியை நடத்தவேண்டி யிருக்கும். அதனுல் பல தொல்லைகள் உண்டு. எனவே கண்ணன் அங்கத்தினர்கள் மட்டும்தான் இதில் கலந்து கொள்ளலாம். அவர்கள் பழைய அங்கத்தினர்களானுலும் புதிய அங்கத்தினர்களானுலும் கண்ணனில் மூன்று இதழ்களில் தொடர்ந்து வெளியாகும் மூன்று கூப்பன்களைக் கத்தரித்து உங்கள் சித்திரங்களுடன் வைத்து அனுப்பவேண்டும். மூன்று கூப்பன்களும் ஒரே இதழ்க் கூப்பன்களாக இருக்கக்கூடாது. அப்படிக் கூப்பன்கள் இல்லாத சித்திரங்களைப் போட்டியில் சேர்ப்பதற்கில்லை. இதை நினைவில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விடுமுறையில் தொடர்கதைகள் எழுத விரும்புவர்கள் எழுதத் தொடங்கலாம். கண்ணன் அங்கத்தினர்கள், அங்கத்தினர்கள் அல்லாதவர்கள், சின்னவர்கள், பெரியவர்கள் என்ற பாகுபாடின்றி யார் வேண்டுமானுலும் அதில் பங்கு கொள்ளலாம். அந்தத் தொடர்கதைப் போட்டியின் அறிவிப்பும் நிபந்தனைகளும் ஜுலை இதழில் வெளியிடப்படும். எனவே இப்பொழுதே நீங்கள் தயார் செய்துகொள்வது நல்லது.

மற்றும் பிரயாணம் போக நேரும் அங்கத்தினர்கள் தங்கள் பிரயாணத்தைப் பற்றிக் கட்டுரையாக எழுதலாம். கற்பனைக் கதைகள் எழுதக்கூடியவர்கள் கதைகள் எழுதி நாளுக்கு ஒன்ருக அனுப்பலாம். விளையாட்டுகள், வேடிக்கைப் புதிர்கள், புதிய துணுக்குகள், கணக்குகள், நீங்களே செய்யக்கூடிய பொருள்கள் இப்படி உங்களுக்கு அந்த விஷயங்களில் பயிற்சியும் முயற்சியும் உண்டோ அவற்றை எழுதி, கண்ணனுக்கு அனுப்பலாம். வரவேற்கிருேம்.

—ஆசிரியர்



ஸினிரமா

★

சமீபத்தில் ஒரு நாள் இரவில் நியூயார்க் நகரத்து மக்கள் சிலர் புதுமையான சினிமா ஒன்று பார்த்தார்கள். அது சினிமா உலகத்திலேயே புரட்சிகரமான மாறுதலைச் செய்யப்போகிற ஒன்று. அதற்குப் பெயர்தான் 'ஸினிரமா' என்பது. இந்த ஸினிரமா என்ற பெயரை நன்றாக மனத்தில் பதித்து உருப்போட்டு வையுங்கள். ஏனென்றால், 'டெலிபோன்' என்ற வார்த்தையைப் போலவே இந்த வார்த்தையும் இன்னும் சில வருஷங்களுக்குள் உலகெங்கும் பரவி விடப் போகிறது.

இந்த ஸினிரமாக் காட்சிக்குரிய திரைக்கு 'ஸைக்ளோரமா' என்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்தத் திரை 64 அடி அகலமும் 23 அடி உயரமும் உள்ளது. அதாவது சாதாரண சினிமாத் திரையைப் போல் ஆறு மடங்கு பெரியது. ஒரே திரைதான். ஆனால் அதில் படத்தை இடுவதற்காக, மூன்று பிரிவு உடையதாக அதைப் பாவிக்கிறார்கள். ஒன்று நடுமத்தி; மற்ற இரண்டும் பக்க வாட்டுகள். திரை ஏறக்குறைய அரை வட்டமாக வளைந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான பிளாஸ்டிக் ரிப்பன்களை இணைத்து உருவாக்கியது இந்தத் திரை. சப்தம் நுழைந்து வருவதற்காக ஏராளமான சன்னத் துவாரங்கள் அந்த ரிப்பன்களில் அமைந்திருக்கின்றன.

இந்த ஸினிரமாவுக்குத் தேவையான படத்தை ஒரே காமிராவிலே தனித்தனியே மூன்று பிலிம் சுருள்களில் எடுக்கிறார்கள். இப்படி மூன்றிலும் எடுக்கும் படங்களை

ரசிகர் கூட்டம்

எனக்குக் கொஞ்சம் சுமாராகப் பாட்டுப் பாட வரும். சாரீரமும் கொஞ்சம் வாய்ப்பாக அமைந்திருந்தது. அன்று திங்கட்கிழமை. மாலை சுமார் ஐந்தரை மணி இருக்கும். நான் மொட்டை மாடியில் உட்கார்ந்துகொண்டு உரத்த குரலில் பாட ஆரம்பித்தேன்.

அரைமணி நேரம் இவ்வாறு பாடிக்கொண்டிருந்தேன். திடீரென்று எங்கள் வீட்டிற்கு எதிரில் கூட்டம் கூட ஆரம்பித்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்பாட்டைக் கேட்பதற்கு இவ்வளவு கூட்டமா என்று வியந்தேன். எனக்குக் குஷி பிறந்து விட்டது. இன்னும் சற்று உரத்த குரலில் பாட ஆரம்பித்தேன். என் அம்மா வந்து என் காதை முறுக்கி, தலையில் ஒரு குட்டு வைத்தாள்.

''சீ, பாடாதே, பாடினது போதும். எனக்கு அவமானம் பிடுங்கித் தின்கிறது. விஷயம் தெரிந்தால் யாராவது பார்த்துச் சிரிக்கப் போகிறார்கள்!'' என்று கூறினாள்.

அதற்கு நான், ''என்னம்மா சொல்கிறாய் நீ! என் பாட்டைக் கேட்டல்லவா வாசலில் இவ்வளவு கூட்டம் கூடியிருக்கிறது? நீ என்னைக் கேலி செய்கிறாயே!'' என்று கேட்டேன்.

அதற்கு அவள், ''அட, பைத்தியமே, இன்று திங்கட்கிழமையல்லவா? நம் வீட்டிற்கு எதிரேயுள்ள கோவிலில் இன்று திருப்புகழ் கச்சேரி நடக்கிறது. அதற்குத்தான் வாசலில் இவ்வளவு கூட்டம். உன் பாட்டைக் கேட்டு ரசிக்க, தோட்டத்துப் பக்கம் தெருவில் பார்த்தாயா?'' என்று பதில் கூறினாள்.

எனக்கு வெட்கமாகப் போய் விட்டது. அங்கே கழுதைகள்தான் குட்டிச் சுவர் ஓரமாக நின்றிருந்தன. உள்ளே போய்விட்டேன்.

—N. T. ராஜசேகரன்.

மறுபடியும் திரையிடும்போது, மூன்றும் துளிக்கூட அப்படி இப்படி நகராமல் ஒன்றின்மீது ஒன்று கனக்காகப் பதிந்து ஒரே உருவமாகும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்றொரு பிலிம் தனியாக அதே சமயத்தில் ஓடிச் சப்தத்தை வெளியிடுகிறது. படத்தின் இயக்கத்துக்கு ஏற்றபடி காட்சி நிகழுட போது ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பல மைக்ரபோன்களுக்குச் சப்தத்தை மாற்றிக்கொண்டே போகிறார்கள். இப்படித் திரையிடுவதற்கான புரொஜக்டர் கருவிகள் சற்று அசைந்தாலும் படம் கோணலாகி விடுமே; அப்படி ஆகாமலிருப்பதற்காக, அந்த புரொஜக்டர் கருவிகளை ஸிமெண்ட் போட்டுக் கட்டி வைக்கிறார்கள்.

ஸினிரமா தியேட்டர்களில் விளக்குகள் அணைக்கின்றன. புரொஜக்டர்கள் வேலை செய்யத் தொடங்குகின்றன. அப்போது நீங்கள் காண்பது என்ன? படக் காட்சியையா? இல்லை: வெனிஸ் நகரக் காட்சியென்றால் அந்த நகரத்துக்கே நீங்கள் போய்விடுகிறீர்கள். அந்த நகரில் ஸான் மார்க்கே ப்ளாஸா என்னுமிடத்தின் அழகான தூண்களும் நேர்த்தியான வாசல்களும் பளிச்சிடும் ஒளியும் உங்களிடம் தத்ரூபமாய் வந்து விடுகின்றன. அங்குள்ள புறாக்கள் சிறகடித்து உங்கள் முகத்திலே வந்து மோதிவிடும்போல் பறக்கின்றன. அப்படி அவை வந்து தங்களை எங்கே மோதிவிடுமோ என்ற பயத்தினால் சில பேர்கள் உண்மையிலேயே தங்கள் தலையைச் சட்டென்று கவிழ்த்துக் குனிந்துகொள்கிறார்கள்.

மலைக் குன்றின்மீது ஏறும் கம்பி ரெயில் வண்டி ஒன்றில் சிலர் சவாரி செய்யும் காட்சியைத்தான் முதல் படமாகத் திரையிட்டார்கள். அதில் அப்படியொன்றும் விசேஷமில்லை. ஆனால் படம் பார்த்துக் கொண்டிருந்த சபையோர் எல்லோருக்கும் தாங்களே அந்த மலை ரெயில் வண்டியில் உட்கார்ந்திருப்பதுபோல் ஒரு தோற்றம் உண்டாயிற்று. செங்குத்தான மலைமீது அது ஏறிக்கொண்டே சென்று

கடைசியில் திடீரென்று தலைகுப்புற அடித்துக்கொண்டு அந்தப் பாதாளத்தில் விழுந்தது அவ்வளவுதான்; படம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு வாலிபப் பெண் அப்படியே மூர்ச்சை போட்டுவிட்டாள்.

1895-இல் முதல் முதலாகப் பாரிஸ் நகரில் ஸினிமா காட்சி நடந்துகொண்டிருந்தபோது இதே போல்தான் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. அந்தக் காட்சியில் ஏதோ ஒரு ரெயில்வே ஸ்டேஷனுக்குள் ரெயில் வண்டி ஒன்று கடகடவென்று ஓடி வந்தது. அப்போது, தியேட்டரில் உட்கார்ந்திருந்த பல வேதாந்திகளே சட்டென்று தங்கள் தங்கள் நாற்காலிகளைவிட்டு எழுந்து ஓடத் தொடங்கினார்கள்.

அந்த நியூயார்க் நகர ஸினிரமா காட்சியில் மலை ரெயில் சவாரிக்குப் பிறகு, விமானப் பிரயாணக் காட்சி ஒன்றைக் காட்டினார்கள். அந்த விமானம் மிக உயர்ந்த சில மலைச் சிகரங்களைச் சுற்றி வலம் வந்தது; ஸான்பிரான்ஸிஸ்கோ விரிகுடாவில் உள்ள தங்க வாசல் பாலத்துக்குள் புகுந்து வெளியே வந்தது. தியேட்டரில் இருந்த அத்தனை பேருக்கும் தாங்களே விமான சவாரி செய்வதுபோல் இருந்ததேயொழிய கேவலம் படம் பார்ப்பது போலத் தோன்றவேயில்லை.

நீளம், அகலம், பருமன் இப்படி மூன்று பரிமாணங்களும் உடைய கன உருவப் படத்தைத் தாங்கள் தயாரித்துவிட்டதாக ஸினிரமா நிபுணர்கள் சொல்லிக்கொள்ளவில்லை. மனிதனுக்கு முன்புறம் உள்ள எல்லாப் பொருள்களும் ஏறக்குறைய அரை வட்ட வளையமாக அவன் கண்ணுக்குத் தென்படுகின்றன இல்லையா? இந்த உண்மையைத்தான் ஸினிரமா நிபுணர்கள் தங்கள் காட்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஸினிரமா திரை மிகப் பெரியது. அதை ஒரே சமயத்தில் நீங்கள் முற்றும் பார்க்க முடியாது. அந்தத் திரையில் உங்கள் கடைவிழிக்குத் தென்படும் பொருள்களெல்லாம் பிரத்தியட்ச வாழ்க்கையில் உங்களுக்கு அப்படித் தென்படுபவை போலவே தோன்றுகின்றன.



தகப்பனார்: டேய், என்னடா இது. நாய் படம் போட்டிருக்கிறாயே, வாயையே காணோமே?

பையன்: நீதானேப்பா அது வாயில்லா ஜீவன் அப்படின்னு சொன்னே?

இந்த ஸினிரமா காட்சியின் மூலம், நீங்கள் லண்டன், கெய்ரோ, பாங்காக் முதலிய நகரங்களுக்கெல்லாம் போய், இதுவரையில் கண்டறியாத காட்சிகளையெல்லாம் நேருக்கு நேரே காண்பதுபோல் கண்டுவிடலாம். அந்த இடங்களின் வாசனை ஒன்றைத்தான் மோந்து பார்க்க முடியாது. மற்றபடி எல்லாம் தத்ரூபமாகவே தோன்றும்.

படத்தில் இலக்கமிட்டுக் காட்டி உள்ளவை: (1) படம் பிடிக்கும் போது சப்தத்தைப் பதிய வைக்க ஆறு மைக்ரபோன்கள் வேலை செய்கின்றன. (2) காமிரா மூன்று பிலிம் எடுக்கிறது. (3) தனித்தனியான மூன்று பிலிம்கள். (4) ஆறு மைக்ரபோன்களிலிருந்து வரும் சப்தத்தை ஒரே 'டேப்'பில் பதிய வைத்துக்கொள்கிறார்கள். (5) சப்தத்தைப் பதித்துவிடும் மாக்னடிக் ஸவுண்ட் ரெக்கார்டர்.

பிரார்த்தனை

எ. ந. கணபதி

தும்பிக்கை விநாயகனே - வையகத்தின்
தொல்லை தவிர்ப்பவனே
கும்பிட்டேன் உன்பதத்தை - நிதம்நிதம்
கூறுவேன் நின்புகழை

ஆனை முகத்தோனே - உன்னடியே
அபயம் அபயம் ஐயா
பானை வயிற்றோனே - அடுத்த வாரம்
பரீட்சை வருகுதையா

தேர்வு என்றவுடன் - பயத்தினால்
தேகம் நடுங்குதையா
சோர்வு வந்ததையா - கண்விழிக்கும்
தொல்லையும் சேர்ந்ததையா

மொன்னை உருப்போட்டும் - பாடங்களை
மும்முர மாய்ப்படித்தும்
என்ன கேள்விகளோ - என்றுமனம்
ஏங்கித் தவிக்குதையா

தோப்புக் கரணம் நூறு - தேறிவிட்டால்
சிதர்த்தேங் காய்நூறு
காப்பதும் நின்கடமை - கடைக்கண்
பார்ப்பதும் நின்கடமை!

துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

மோகனின் அம்மாவுக்கு அடிக்கடி 'ரத்தக் கொதிப்பு' என்ற நோய் வருவதுண்டு. ஏதாவது அதிர்ச்சி ஏற்பட்டால், மண்டையில் ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு, உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடலாமல்லவா? கோபாலசாமிக்கும் திகைப்பு ஏற்பட்டது. அவர் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் வழிந்து கீழே விழுந்து சிதறின.

மோகனின் அம்மா முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டாள். ''ஐயோ, என் இரண்டு குழந்தைகளையும் இப்படியே நான் இழந்துவிட்டேனே!'' என்று அவள் கதறியபோது, கோபாலசாமியின் மனம் நெருப்பிலிட்ட மெழுகு போல் இருந்தது.

ஆம்; கோபாலசாமிக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. மூத்த பிள்ளை சிறுவயதில் ஒரு உற்சவக் கூட்டத்தில் காணாமற் போய்விட்டான். அவனிடம் பெரும் பரிவு கொண்டிருந்தனர் கோபாலசாமியும் அவர் மனைவியும். அவன் திருவிழாக் கூட்டத்தில் காணாமற் போனதும் அரண்டுபோன பெற்றோர்கள் ஊரெல்லாம் தேடினார்கள். ஆனால் போனவன் போனவன்தான். அப்புறம் அவன் அகப்படவேயில்லை. அவன் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் மோகன் பிறந்தான். மோகன் பிறந்ததும், தம் மூத்த பிள்ளை சுகுமாரைப் பற்றிய நினைவு அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துகொண்டு வந்தது. சுகுமாரிடம் காட்டியதைப்போல இரண்டு மடங்கு பரிவு காட்டி மோகனை வளர்த்துவரத் தலைப்பட்டனர். ஆனால், இப்போது மோகன் மறைந்ததும், சுகுமாரின் நினைவும் அவர்களுக்கு வந்துவிட்டது. இரண்டு அருமையான புத்திரர்களைப் பெற்று, விதி வசத்தால் அவர்களை இழந்துவிட்டோமே என்று நினைத்தபோது கோபாலசாமியின் மனம் தூள் தூளாக நொறுங்கியது. பாசம் தலை காட்டியது.

திடீரென்று மோகனின் அம்மா, ''ஆ..மோகன்...கண்ணே...ஆற்றிலே விழாதே..'' என்று ஏதேதோ பிதற்றியபடி அங்கேயே விழுந்து மூர்ச்சையானாள். கோபாலசாமிக்கு நெருப்பை மிதித்தாற்போலிருந்தது. ஆம், மோகன் தற்கொலை செய்துகொண்டு விட்டால்..? இந்த எண்ணம் தோன்றியதும், கோபாலசாமி உடனே தம் அறைக்கு ஓடி, டாக்டருக்கு போன் செய்தார். பிறகு உள்ளூர்ப் பத்திரிகாலயம் ஒன்றிற்கும் போன் செய்தார்.

டாக்டர் வந்தார்; ஊசி போட்டார்; மருந்தை எழுதிக் கொடுத்து

விட்டு, அவள் உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ளும்படி கோபாலசாமியிடம் சொல்லிவிட்டு அகன்ருர்.

கோபாலசாமி கொந்தளிக்கும் மனத்தை உடையவராய் திக்பிரமை பிடித்து நின்றுவிட்டார்!

2. மோகன் எங்கே?

'படா' ரென்று சாத்தப்பட்ட அந்தக் கதவின் சப்தம் தன் நெஞ்சிலே விழுந்ததுபோல இருந்தது மோகனுக்கு!

அவன் தகப்பனுர் கை வைத்துத் தள்ளிய கழுத்தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். உடம்பெல்லாம் விண் விண் என்று தெறித்தது. கை கால்கள் வலி தாங்காமல் தொய்ந்து கிடந்தன. மெள்ளக் கையை ஊன்றிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

இனி என்ன செய்வது என்ற கேள்வி பெரிய கேள்விக்குறியாக அவன் முன்னுல் நின்றது.

'தற்கொலை செய்து கொள்வது தான் மேல்' என்றது அவன் மனம். தன்னைக் கண்மண் தெரியாமல் அடித்துவிட்ட அப்பாவைப் பழி வாங்க அதுதான் சரியான வழி என்று அவனுக்குத் தோன்றியது. தன் தந்தை அடித்த அடி இருக்கட்டும். அவமானம்? அதை அவன் எப்படிப் பொறுப்பது?

அவன் நண்பர்கள் பொழுது விடிந்ததும் அவனிடம் வந்து துக்கம் விசாரிப்பார்கள்; தங்கள் மனமார்ந்த அநுதாபத்தை அவனுக்குத் தெரிவிப்பார்கள். கோடி வீட்டுக் கோண்டு மெள்ள கண் சிமிட்டிக் கேலி செய்வான். அவனுடைய ஆசிரியர்கள் அவனை ஏளனமாகப் பார்ப்பார்கள். அவன் நண்பர்கள் அவனைக் கண்டு ஒதுங்கிப் போவார்கள். நேற்று வரை அவனுடன் கை கோத்து விளையாடிய அவன் சிநேகிதர்கள் அவனுடைய சிநேகத்தை நிறுத்திக் கொள்ளப் பார்ப்பார்கள். பாஸ் செய்த பையன்களின் வீட்டில் உள்ள பெற்ருேர்கள், ''அடே, இனிமேல் மோகனுடன் பழகாதிர்கள், நீங்களும் உருப்படாமற் போய்விடுவீர்கள்'' என்று ரகசியமாக எச்சரிப்பார்கள். ஐயோ, கொடுமை! கொடுமை!

அவ்வளவு தூரம் போவானேன்? அவனிடம் வெகு பிரியமாயிருந்த அவன் தந்தையே அவனை உருப்படாதவன் என்று சொல்லிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டார். 'இனி இந்த வீட்டில் ஏருதே' என்று எச்சரித்துவிட்டார். இனி அவன் எங்கே போவது? யாரிடம் போய் அடைக்கலம் பெறுவது? ஆற்று நீரிடத்திலேதான் அடைக்கலம் புகவேண்டும். அல்லது தண்டவாளத்தினிடம் சரணமடைய வேண்டும்—திண்ணையில் உட்கார்ந்தபடி அந்த இருளில் சிந்தித்துக்கொண் டிருந்த மோகனின் மனத்தில் இந்த எண்ணங்கள் யாவும் ஓடின. தூக்குக் கயிறு, ஆறு, தண்டவாளமா என்ற கேள்வி மனத்தில் எழுந்தது.

ஆனுல், லீலா?

லீலாவின் நினைவு வந்ததும், மோகனின் மனத்தில் பாசம் ஊறிற்று. லீலா வேறு யாருமல்ல; அவன் வீட்டுக்கு எதிர் வீட்டுப் பெண். மோகனிடம் அவளுக்குத் தனி அன்பு. மோகனையும் லீலாவையும் எப்பொழுதும் சேர்ந்தே பார்க்கலாம். இருவருக்கும் ஒருவர் மேல் மற்றவருக்கு அலாதி அன்பு உண்டு.

அவர்கள் இருவருக்குள்ளும் எப்பொழுதாவது சண்டை வரும். அந்தச் சண்டையில்கூட ஒருவித ஒற்றுமை இருக்கும். ஒரு சமயம் ஏதோ கோபத்தில் மோகன் லீலாவின் கன்னத்தில் 'பளீ'ரென்று அறைந்துவிட்டான். அவள் விக்கி விக்கி அழுதாள். மோகனுக்கே தான் ஏண்டாப்பா அடித்துவிட்டோம் என்ருகிவிட்டது. அவள் பின் பெற்ருேரிடம் இதைச் சொன்னுல், அவர்கள் தன் பெற்ருேரிடம் சொல்லிவிடுவார்கள். தன் அப்பா தன்னைச் செம்மையாக உதைத்துவிடுவார் என்று பயந்து நடுங்கினுன் மோகன். ஆனுல், லீலாவின் வீட்டில் அவள் கன்னம் வீங்கியிருப்பதைக் கண்டு அவளை விசாரித்த போது, ''ஒண்ணுமில்லேம்மா, எங்க டீச்சர் என்னைச் சரித்திரத்

திலே ஒரு கேள்வி கேட்டாள்; அதற்கு நான் பதில்சொல்லத் தெரியாமல் முழித்தபோது என் கன்னத்தில் அறைந்துவிட்டாள்'' என்று உபாத்தியாயரின் மீது பழியைப் போட்டுவிட்டாள். அவளுடைய பரிவை நினைத்தபோது, மோகனின் கண்களில் நீர் துளித்தது. தம்மையறியாமல் அவன் கண்கள் எதிர் வீட்டை நோக்கின.

'இந்த அமைதியான இரவில் அவள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருப்பாள். மறுநாள் காலை நான் தற்கொலை செய்துகொண்டு விட்டேன் என்று அறிந்ததும் அவள் அப்படியே துடிதுடித்துப் போய் விடுவாள்.

'ஐயோ, வேண்டாம்! தற்கொலை செய்துகொள்ள வேண்டாம். நம்மிடம் அலாதி அன்பு கொண்டிருக்கும் லீலாவையும், நம் அம்மாவையும் விட்டு, இந்த உலகத்தை விட்டே போவது சரியா? சரியல்ல' என்று கூறிற்று மோகனின் அறிவு. 'தந்தை என்னை அடித்ததற்குப் பழி தீர்ப்பதுபோல ஆற்றிலோ குளத்திலோ விழுந்துவிட்டால், அப்புறம் விஷயம் தெரிந்து அம்மா எவ்வளவு கதறுவாள்! லீலா எப்படிக் கண்ணீர் வடிப்பாள்! அப்பா எவ்வளவு வருத்தப்படுவார்! அடித்த கையே அணைக்கவும் செய்யும் அல்லவா?'

ஆகவே, தற்கொலை செய்துகொள்வது சரியல்ல. அம்மாதிரியான எண்ணம் சிறுவனான தனக்கு உண்டானதே மிகவும் தவறானது என்று எண்ணிய மோகனுக்கு வேறொரு யோசனை உதித்தது. இரவோடு இரவாக ரெயிலேறிச் சென்னைக்குப் போய் அங்கே ஏதாவது வேலை கிடைக்கிறதா என்று முயற்சி செய்து பார்த்தால் என்ன என்று தோன்றிற்று அவனுக்கு. திண்ணையிலிருந்து சப்தம் செய்யாமல் குதித்து விறுவிறுவென்று அந்த இரவிலேயே வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

சோமனூர் மிகச் சிறிய கிராமம். ஆதலால் அங்கே ரெயில் நிலையம் கிடையாது. ரெயிலேறிப் போக வேண்டுமானால் பதினேழு மைல்கள் வண்டியில் போயாக வேண்டும்; குறுக்கு வழியில் சென்றால்

நான்கைந்து மைல்கள் குறைவாக இருக்கும். ஆனால், அந்தப் பாதை மிகவும் கரடு முரடானது. கல்லும் முள்ளும் புதர்களும் மரங்களும் மண்டிக் கிடக்கும். அந்தப் பாதையில்தான் சற்றும் பயமின்றி நடந்துகொண்டிருந்தான் மோகன்.

நிலையறியாது ஓடிக்கொண்டேயிருந்த மோகனின் கால்கள் தள்ளாடின; உடல் சோர்ந்தது; வியர்வை உடல் முழுவதும் ஆறுகப் பெருகிற்று. பார்வை தடுமாறிற்று. பொழுது விடிய இன்னும் நான்கைந்து மணி நேரந்தான் இருக்கும். இதுவரை அவன் பன்னிரண்டு மைல்களாவது நடந்திருப்பான். எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு நடந்தான். கடைசியில் கால்கள் தடுமாற ஓடிவந்து எப்படியோ ரெயில் நிலயத்தை அடைந்து விட்டான். ரெயில் நிலயத்தில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த விளக்குகளின் வெளிச்சம் அவன் கண்களைக் கூச வைத்தது. மோகன் தன் கால் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான். பர்ஸ் பத்திரமாக இருந்தது.

இனிமேல் ஓர் அங்குலங்கூட நகர முடியாது என்று அவனுக்குத் தோன்றிற்று. ''சார், மெட்ராஸக்குப் போகும் அடுத்த வண்டி எப்போதும் வரும்?'' என்று ஸ்டேஷன் மாஸ்டரை விசாரித்தான்.

அந்த உத்தியோகஸ்தர் ஏதோ ஓர் அதிசயப் பொருளைக் கண்டவரைப்போல மோகனைப் பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தார். அவன் ஆடைகளையும். அவன் இருந்த அலங்கோல நிலையையும் பார்த்து அருவருப்புத் தட்டியவரைப்போல முகத்தைச் சுளித்து, ''காலையில்தான் தம்பி அடுத்த வண்டி வரும்'' என்று சொல்லிவிட்டுப் பரபரவென்று அகன்றுவிட்டார்.

மோகன் அங்கிருந்த ரெயில்வே ஸ்டாலுக்குப் போய்ச் சில வாழைப் பழங்கள் வாங்கிச் சாப்பிட்டான். வயிறு நிறையத் தண்ணீர் குடித்தான். இதற்காகச் செலவழிந்தது போக மீதி யிருந்த பணம் சென்னைக்கு டிக்கட் வாங்குவதற்குப் போதுமானதாக இருந்தது.

அன்றைய இரவை அந்த ஸ்டேஷனிலேயே தூங்கிக் கழித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் பிளாட்பாரத்தில் கிடந்த சிமெண்ட் பெஞ்ச் ஒன்றின்மீது படுத்துக் கொண்டு கைகளைத் தலையணையாக வைத்துக்கொண்டு, படுத்துக் கொண்டான். விகு விரைவிலேயே நித்ராதேவி அவனைத் தன் வசமாக்கிக்கொண்டாள்.

3. யார் அந்த இளைஞன்?

பல பலவென்று புலர்ந்தது. ஸ்டேஷனில் எழுந்த கூச்சல்களைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டான் மோகன். அவன் உடம்பையெல்லாம் அணு அணுவாக அடித்துப் போட்டாற் போல வலித்தது.

தன் நிலை விளங்கவே அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தது. முதல் நாள் இரவு நினைவுகள் வந்ததும், மெள்ள எழுந்து சென்று ஓர் உத்தியோகஸ்தரிடம், ''சார், சென்னைக்குப் போகும் வண்டி வந்துவிட்டதா?'' என்று விசாரித்தான். ''இன்னும் பத்து நிமிஷங்களில் வரும்'' என்று அவர் கூறினர்.

முதலில் டிக்கட் கொடுக்கும் இடத்திற்குச் சென்று, எழும்பூருக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டான். இதற்குள் கைகால்களை நன்ருகக் கழுவிக்கொள்வோம் என்று தோன்றவே, டிக்கட்டை மேல் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு குழாயடியை நோக்கி விரைந்தான்.

அப்போது அவன் இருந்த நிலையில் அவன் தந்தையே வந்தால் கூட அவனை அடையாளம் கண்டு பிடிக்கத் திணறியிருப்பார். தலை 'பம்'மென்று கலைந்து கிடந்தது. சட்டையும் நிஜாரும் அழுக்கடைந்திருந்தன. முதல் நாள் இரவு முழுவதும் அழுது அழுது வீங்கிப் போன முகம்! உப்பிக்கிடந்த கன்னங்கள். குழாய் நீரில் அலம்பிக் கொண்டதும் 'அப்பாடா' என்று இதமாக இருந்தது அவ

னுக்கு. பிறகு, குனிந்து இரு கைகளையும் குழாயக் கடியில் கொடுத்து நீரைக் குடித்தான். நேரே மள மளவென்று பிளாட்பாரத்திற்கு விரைந்தான். 'நல்ல வேளை! அதிக நேரம் தூங்கி விடாமல் இருந்தோமே' என்று நினைத்துக் கொண்டான்.

அந்த ஸ்டேஷனில் தனக்குத் தெரிந்தவர் யாராவது வந்து, அவர் கண்ணில் பட்டு விடப் போகிறோமே என்ற பயமும் இடையிடையே தலை தூக்கியது. அதற்காகக் கூடியவரை கூட்டத்திற்குள்ளே மறைந்து நின்றான்.

அதோ, வெகு தூரத்தில் 'குபு குபு'வென்று கறுப்புப் புகை விட்டுக்கொண்டு வருகிறதே ரெயில்! குறிப்பிட்ட நேரத்தில் வந்துவிட்டோம் என்ற பெருமிதத்தினாலோ என்னவோ 'கூ'வென்று குதூகலத்துடன் கத்தியது எஞ்சின்.

அப்போது ஒரு சிறு பையன் இரைக்க இரைக்க அவனிடம் ஓடி வந்தான். ''என்ன, சாமி! உன்னைக் கண்டு பிடிக்கறத்துக்குள் பலே பேஜாராப் போயிடுத்து... அங்கே குழாயடியிலே இந்த டிக்கட்டைப் போட்டு நீபாட்டுக்கு வந்துட்டியே..அதை எடுத்துக்கிட்டு உன் பின்னாடியே வர்றேன். நீ ஒரே ஓட்டமா ஓடறயே?'' என்று சொல்லிக்கொண்டே அவனுடைய டிக்கட்டை மோகனிடம் கொத்தான்.

மோகனுக்குக் 'சுருக்'கென்றது. குழாயடியில் குனிந்து தண்ணீரில் குடிக்கும்போது அந்த டிக்கட்டைக் கீழே போட்டிருக்க வேண்டும். தன் அஜாக்கிரதையாக்காகத் தன்னையே நொந்துகொண்டான் மோகன். அந்தச் சிறுவனுக்கு நன்றி செலுத்திவிட்டு டிக்கட்டை வாங்கிக்கொண்டான். அவனைப் போன்ற நல்லவர்களும் இவ்வுலகில் இருப்பதற்காக இறைவனுக்குப் வணக்கம் செய்தான்.

பெரும் ஆரவாரத்துடன் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது எஞ்சின். அதைத் தொடர்ந்து 'கடகட'வென்ற ஒலியுடன் மற்றப் பெட்டிகளும் வந்தன.

பிளாட்பாரத்தில் ஒரே பேச்சும் இரைச்சலுமாக இருந்தது. பேப்பர் விற்கும் பையன்களும் தின்பண்டங்கள் விற்பவர்களும் ரெயிலிலிருந்து இறங்குபவர்களும் அதில் ஏறுபவர்களும் ஆகிய இவர்கள் போடும் கூச்சல் ஸ்டேஷனுக்கே ஒரு தனிச் சோபை தந்தது. ரெயிலில் ஏறுகிறவர்கள் தத்தம் சாமான்களை வெளியிலிருந்தபடியே ஜன்னல் வழியாகப் பெட்டிக்குள் திணித்து ஏறிக்கொண்டிருந்தார்கள்.

மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்த மோகனும். அதிகக் கூட்டம் இல்லாதிருந்த ஒரு பெட்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டான். அந்த ரெயிலில் போய்க்கொண்டிருந்தவர்களில் சிலர் கல்யாணங்களைப் பார்க்கச் சென்னைக்குப் போய்க்கொண்டிருந்தனர். மற்றும் சிலர் தம் உறவினர்களைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தனர். ஆனால்....

தன் நிலையை எண்ணிப் பார்த்த மோகனுக்கு அழுகை துருத்திக்கொண்டு வரும்போலாகி விட்டது. அவனுக்கு வேண்டியவர்கள் யார் இருக்கிறார்கள் சென்னையில்? தான் எங்கே போவது? என்ன செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை. ஏதோ குருட்டு எண்ணத்தில் டிக்கட் வாங்கி ரெயிலிலும் ஏறிவிட்டான். ஆனால், அவன் சென்னையைப்பற்றிப் பல பத்திரிகைகளிலும் படித்திருக்கிறானே தவிர, இதற்கு முன் பட்டணத்தைப் பார்த்ததே இல்லையே? சென்னையை முதன் முறையாகப் பார்க்கப் போகிறோம் என்ற ஆர்வமும் அவன் மனத்தில் ஒரு மூலையில் இருந்தது. தனக்கு இத்தகைய அநுபவம் ஒன்று நேரும் என்று அவன் முதல் நாள் கனவுகூடக் கண்டிருப்பானா! ஆனால், எல்லாவற்றிற்கும் தெய்வ சித்தம் என்று ஒன்று இருக்கிறதே!

ரெயில் ஓடிக்கொண்டிருந்தது. பல ஸ்டேஷன்களையும் விறுவிறு என்று கடந்து போய்க் கொண்டிருந்தது. மோகனின் முகத்தில் ஜில்லென்ற காற்றுப் பட்டது. அவன் கை, கால்-சட்டையில் பர்ஸும் டிக்கட்டும் பத்திரமாக இருக்கின்றனவா என்று பரி

சோதித்துக்கொண் டிருக்கையில், அவன் கண்கள் அந்தக் 'கம்பார்ட் மென்'டில் இருந்த இதர பிரயாணி களை ஒரு நோட்டம் விட்டன.

அதில் அதிகம் பேர் இல்லை. மோகனுக்கு எதிர் 'ஸீட்'டில் ஜன்னலோரத்தில் கறுப்புக் கண் ணுடி அணிந்திருந்த ஓர் இளைஞன் உட்கார்ந்துகொண் டிருந்தான். நீண்டிருந்த அவன் மூக்கு, அவனுக் குத் தனி அழகை அளித்தது. தலை படியப்படிய வாரப்படாமல், அலட்சியமாக விடப்பட்டிருந்தது. அவன் கண்களில் ஓர் அலட்சிய பாவம் மேலோங்கிக் காணப் பட்டது. அவன் அணிந்திருந்த கறுப்புக் கண்ணுடி மூலம் அவன் யாரையும் எளிதில் பார்க்கலாம்; ஆனால், அவன் யாரைப் பார்க் கிருன் என்று கண்டு பிடிக்க முடியாதபடி மற்றவர்களை அந்தக் கறுப்புக் கண்ணுடி தடுத்தது. தன் இரு கால்களையும் தூக்கி ஜன்னலின் மேல் போட்டுக்கொண்டு அடிக்கடி வெளியே பார்த்தவண்ணம் இருந் தான் அவ்விளைஞன். உல்லாசத் திற்காக அவன் அவ்விதம் பார்த் துக்கொண் டிருந்தானு அல்லது அவன் மனத்தில் பெரும் சிந்தனை அலைகள் புரண்டு கொண்டிருந் தனவா என்று நிர்ணயிக்க முடியா மல் இருந்தது. அவனுக்குப் பக்கத்தில் அன்றைய உள்ளூர்த் தினசரி ஒன்றிருந்ததைக் கவனித் தான் மோகன். மோகனுக்கு ஏனோ தன்னையுமறியாமல் அந்த இளைஞன் மேல் ஒரு மதிப்பு ஏற்பட்டது. அவன், தன் வாழ்க்கைப் போக் கையே மாற்றி அமைக்கப் போகி ருன் என்பதை மோகன் என்ன கண்டான்?

மேல் 'பெர்த்'தின் மீது மல் ஜிப்பா ஒன்று போட்டுக்கொண்டு கிருதா மீசையுடன் ஓர் ஆசாமி படுத்திருந்தான். அவன் தலை மாட்டில் ஒரு சிறிய தோல் பெட்டி இருந்தது. அந்தத் தோல் பெட்டி யின் அருகிலேயே கையை வைத் துக் கொண்டிருந்தான் அந்தக் கிருதாமீசை ஆசாமி. நடு நடுவே கண்களை மூடுவதும் திறப்பதுமாக இருந்தான்.

இவர்களைத் தவிர இன்னும் இரண்டு மூன்று பிரயாணிகளே அங்கே இருந்தனர். ஒருவா அரைக் கண்ணை மூடியபடி அரைத் தூக்கத் தில் ஆழ்ந்து கிடந்தார். ரெயில் ஒவ்வொரு நிலையத்தில் நிற்கும் போதும் 'சடக்' கென்று விழித்துக் கொண்டு, ''ஹா, ஸ்டேஷனு!'' என்று கேட்டு விட்டு மறுபடியும் கண்களை மூடிக்கொண்டார்.

எதிரில் உட்கார்ந்திருந்த இளைஞன் தன்னைக் கூர்ந்து கவனிப் பதைத் திடீரென்று உணர்ந்தான் மோகன். அந்த இளைஞன் தான் அணிந்திருந்த கறுப்புக் கண்ணுடி யைக் கண்களினின்றும் எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். அவன் தன்னுடன் பேச விரும்பு கிருன் என்பதை மோகன் அறிந் தான். 'சரி, உன் பெயர் என்ன?' என்று கேட்கப் போகிருன் என்ற கேள்வியையும் எதிர்பார்த்து அதற்குரிய பதிலையும் ஆயத்தமாக வைத்திருந்தான் மோகன்.

அப்போது அந்த இளைஞனும் மோகனுடன் பேசத் தொடங்கி ஞன். ''தம்பி, உன் பெயரென்ன?'' என்று அன்பொழுகக் கேட்க வில்லை. அதற்குப் பதிலாக, ''மோகன், சென்னைக்குப் போய்க் கொண்டிருக்கிருயா?'' என்று கேட் டான். அவன் குரலில் அலட்சிய பாவம் மேலோங்கி நின்றது.

மோகனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தான் இதற்கு முன் அந்த இளைஞனைப் பார்த்ததே கிடையாது; அப்படியிருக்க அவன் மட்டும் எப்படித் தன்னுடன் வெகு நாள் பழகியவனைப்போலச் 'சடா' ரென்று அந்தக் கேள்வியைக் கேட் டான்? மோகனுக்குப் பதில் சொல்ல நா எழவில்லை. ஆகவே, 'ஆமாம்' என்கிற பாவனையில் தலையை ஆட்டினன்.

அந்த இளைஞன் அத்துடன் நின்றுவிடவில்லை. தொடர்ந்து இன்னெரு கேள்வியைப் போட் டான்: ''அப்பா அடித்தார் என்ருல் உடனே அவரிடம் கோபப் பட்டுக்கொண்டு ரெயிலேறிவிடுவது தான் உன் வழக்கமோ?''

இந்தக் கேள்வி மோகனை இன் னும் திடுக்கிடச் செய்தது.

(தொடரும்)

சரியான காவல்

மாறன்

சம்பங்கிபுரத்தில் குமாரசாமிப் பிள்ளையின் தோட்டத்து வாழைக் காய்களுக்கு ஒரு தனி மதிப்பு இருந்துவந்தது. அந்த ஊரில் வாழைக்காய் சாப்பிடும் மகாஜனங்கள் யாவரும் அதன் ருசியைப் பற்றி அடிக்கடி புகழ்வதுண்டு. தோட்டம் பெரியது. விளையும் காய்களும் ஏராளம். சில்லறை வியாபாரிகளும் மொத்த வியாபாரிகளும் தோட்டத்து வாசலில் வந்து வாழைத் தாறுகளை நூற்றுக் கணக்கில் வாங்கிக்கொண்டு போவார்கள்.

வாழைக் குருத்தைப்போலவே பிள்ளையவர்களின் செல்வமும் 'கிறு கிறு' என்று வளர்ந்துவந்தது. பக்கத்து நிலங்களையும் விலைக்கு வாங்கித் தோட்டத்தை விரிவு படுத்திக்கொண்டு போனார் பிள்ளை. தோட்டம் விசாலமாகி வரவர வேலையாட்களும், பக்கக் கன்று களைப்போல அதிகரித்து வந்தார்கள். தண்ணீர் பாய்ச்ச மூன்று பேர்; தாறுகளை வெட்டுவதற்கு இரண்டு பேர்; இரவில் தோட்டக் காவலுக்கு ஒருவன் என்று ஏழெட்டுத் தோட்டத் தொழிலாளிகளை அமர்த்திக்கொண்டு, தாமும் அதில் பாடுபட்டு வந்தார் குமாரசாமிப் பிள்ளை.

காவல்காரக் கறுப்புச்சாமி அந்த வாழைத் தோட்டத்தை இரவு முழுவதும், கண்ணை இமை காப்பதுபோலத்தான் காத்துவந்தான். ஆனால் இரண்டொரு வாழைக் காய்த் திருடர்கள் கறுப்புச்சாமியை விடச் சாமர்த்தியசாலிகளாக இருந்தார்கள். தோட்டத்தில் இன்று சாயங்காலம் வெட்டக்கூடிய வாழைத் தாறுகள் நூறு இருந்தால், நாளைக் காலையில் தொண்ணூற்றைந்துதான் இருக்கும். ஐந்து தாறுகள் இரவில் எப்படியோ மாயமாக மறைந்துவிடும். குமாரசாமிப் பிள்ளை காவல்காரக் கறுப்புச்சாமியைக் கூப்பிட்டு "இனி இது போலத் திருட்டுப் போனால் அதற்குண்டான விலையை உன்னுடைய சம்பளத்தில் பிடித்துக்கொள்வேன்" என்று பல தடவை பயமுறுத்தினார்.

கறுப்புச்சாமி இரவு முழுவதும் வாழைத் தோட்டத்திற்கு உள்ளும் புறமும் வளைய வளைய வந்துகொண்டுதான் இருந்தான். ஆனால் இவன் பார்க்கும்போது ஒரு திருடனாவது வாழை மரத்தில் தாற்றை வெட்டிக்கொண்டிருக்கவில்லை. இவன் தோட்டத்தின் வடக்குக் கோடியில் போய்க்கொண்டிருக்கும்போது தெற்கு மூலையில் வாழைத் தாறுகள் 'அபேஸ்' ஆகிவிடும். இவன் தெற்கில் வந்து, தாறு வெட்டப்பட்ட வாழை மரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் வடக்குக் கோடியில் இரண்டு தாறுகள் களவு போய்விடும். இப்படியேதான் தினமும் வாழைக் குலைகள் களவு போய்க்கொண்டிருந்தன.

ஒரு நாள் இரவு இவ்வாறு பன்னிரண்டு தாறுகள்வரை காணாமல் போய்விடவே குமாரசாமிப் பிள்ளைக்குக் கோபம் பன்னிரண்டு மடங்கு அதிகரித்துவிட்டது. கறுப்புச்சாமியைக் கண்டபடி திட்டினார். அவன் இரவு முழுவதும் தோட்டத்திலுள்ள புளிய மரத்தடிக் குடிசையில் தூங்கிவிடுவதாக எண்ணினார் அவர். இரவு எட்டு மணி முதல் காலை ஐந்து மணிவரை கண்ணை மூடுவதுகூட இல்லை என்று கறுப்புச்சாமி சாதித்தான். ஆனால் அவனுடைய பேச்சில் அவருக்கு நம்பிக்கை ஏற்படுமா? அவன் தோட்டத்துக் குடிசையில் நன்றாக உறங்கிக்கொண் டிருக்கும்போது கண்டுபிடித்து உடனே அவனை வேலையைவிட்டு நீக்கிவிட வேண்டு

மென்று மனத்தில் திட்டமிட்டுக் கொண்டு அவனைப் போகச் சொல்லிவிட்டார்.

அன்று மாலையில் கறுப்புச்சாமி தன் வீட்டில் மனைவியை அதட்டிக் கொண்டிருந்தான். "இன்னுமா கஞ்சி காய்ச்சலே நீ? காவலுக்கு எப்போ போறது நான்? திருடனைக் கண்டுபிடிக்கலேன்னு, 'என் வேலையே போயிடும்' அப்படின்னு ஐயா அடிக் கடி சொல்றாரு. நேத்து ராத்திரி பன்னிரண்டு தாறு களவு போயி ருக்குது. நீ என்னடான்னா இப்படி நேரத்தைக் கடத்தறே!" என்று கோபித்தான். அவனுடைய மனைவி சுப்பம்மாளும் அவசர அவசரமாக அடுப்பில் நெருப்பை மூட்டி உலைப் பானையை ஏற்றி வைத்தாள்.

அதே சமயத்தில் கறுப் புச்சாமியின் மைத்துனன் முனிசாமி ஊரிலிருந்து வந்து சேர்ந்தான். கணவ னும் மனைவியும் விருந் தாளியை வரவேற்று உபசரித்தார்கள். கஞ்சி காய்ச்சுவதற்காக அடுப் பில் ஏற்றிய பானையை இறக்கி வைத்தாள் சுப் பம்மாள். வெகு நாட் களுக்குப் பிறகு வந்திருக் கும் தன் அண்ணனுக் குக் காய்கறிகளோடு



சமையல் செய்ய வேண்டுமென்பது அவள் விருப்பம். விருந்துச் சாப்பாடு தயாரிப்பதற்குள் இரவு ஒன்பது மணியாவது ஆகிவிடும். கறுப்புச்சாமியோ ஏழு மணிக்குள் காவலுக்குப் போய்ச் சேர வேண்டும்: ஆகையினால் அவன் மைத்துனனையும் அழைத்துக்கொண்டு தோட்டத்திற்கே போய்விட்டான்.

மைத்துனனிடம் வாழைத் தாறுகள் களவு போகும் விஷயத்தையும் அதனால் தனது வேலைக்கு ஆபத்துக் காத்திருப்பதையும் விவரமாக எடுத்துச் சொல்லிக்கொண்டே அவனோடு தோட்டத்தைச் சுற்றி வந்தான். மணியும் ஒன்பதடித்தது. யாராவது ஒருவர் காவல் இருக்க வேண்டும். அதனால் இருவரும் ஒன்றாக வீட்டுக்குப் போய்ச் சாப்பிட முடியாது. ''முனிசாமி, நீ முதல்லே போயி சாப்பிட்டுவிட்டு வந்துவிடு. நீ வந்த பிறகு நான் சாப்பிடப் போகிறேன்'' என்று சொல்லி மைத்துனனை அனுப்பிவிட்டுத் தோட்டத்தைத் தனியாகச் சுற்றி வந்துகொண்டிருந்தான் கறுப்புச்சாமி.

அரைமணி நேரத்தில் முனிசாமி விருந்துச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுத் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான். ''தங்கச்சி காத்துக்கிட்டு இருக்குது மச்சான். சீக்கிரம் போய்ச் சாப்பிட்டுவிட்டு வா'' என்று கறுப்புச்சாமியை அனுப்பினான். ''அது சரி, முனிசாமி. நான் திரும்பி வருகிறவரைக்கும் தோட்டத்தை வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளணும் நீ. கதை பூராவும் நான் உன்னிடத்திலே சொல்லியிருக்கிறேன். தோட்டத்துக்குள்ளே எவனாவது வந்து பதுங்கினா உடனே புடிச்சுக் கட்டிப் போட்டுடு, இந்தப் புளிய மரத் தோட. பொல்லாத பயலுவ

வோட்டுச் சாவடியில்!



கிராமத்து ஆள்: ஐயா, ஒரு ஆணியும் சுத்தியும் தாங்க.

அதிகாரி: எதற்கப்பா?

ஆள்: 'குதிரைப் பெட்டியில் ஓட்டை போடுங்க' என்கிறார்களே. அதற்கு ஓட்டை (துவாரம்) போடத்தான்!

—எஸ். கிருஷ்ணமூர்த்தி சென்னை.

ஊரு இது. பூனைபோல வந்து நுழைஞ்சு நரிபோலக் கொண்டு போயிடுவானுக வாழைக் காயை'' என்று எச்சரித்துவிட்டுப் போனான் கருப்புச்சாமி.

சிறிது நேரத்திற்கெல்லாம் வாழைத் தோட்டத்தின் நடுவில் 'சலசல'வென்று ஏதோ சத்தம் கேட்டது. முனிசாமி பதுங்கிப் பதுங்கிப் போய் அது என்னவென்று கவனித்தான். சந்தேகமில்லாமல் திருடன்தான் அடிமேலடி வைத்து வாழைப் பாத்திகளின்மேல வந்துகொண்டிருந்தான். முனிசாமி குபீரென்று பாய்ந்து அந்த ஆளைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, ''அகப்பட்டாயாடா பயலே?'' என்றான். வந்த ஆள் திமிறிக்கொண்டு,'' நீதானடா அகப்பட்டுக்கொண்டது'' என்று கூவினான். ''யாரடா நீ?'' என்று அதட்டினான் முனிசாமி.

''நான் யாரென்று கேட்கிறே? தோட்டத்திற்குள் வாழைத் தாறு திருட வந்ததுமல்லாமல் என்னையா யாரென்று கேட்கிறே? இப்பப் பாரு'' என்று கத்தினான் வந்த ஆள்.

''அப்பேன், இந்த உருட்டல் எல்லாம் நம்ம கிட்ட நடக்காது. உம்..நட, அந்தப் புளிய மரத் தடிக்கு. இல்லேன்னா கணுக்காலைப் பேர்த்துப் புடுவேன்'' என்று ஓங்கி ஒரு குத்து விட்டான் முனிசாமி;

' டேய், என்னையா அடிக்கறே? என்னையா திருடன் என்கிறே? நீதாண்டா திருட வந்தது. விடுடா கையை.''

''இந்த முறைப்புக்கெல்லாம் பயந்துவிடமாட்டேன் தம்பி. உம், நட. உன்னை மரத்தோட கட்டி வச்சு உரிக்கிறேன் பாரு'' என்று கையைப் பிடித்துப் பின்புறம் முறுக்கினான் முனிசாமி;

''ஐயையோ! திருட்டுப் பயல் என் கையை வளைக்கிறானே!'' என்று கூப்பாடு போட்டான் வந்தவன்.

''தம்பி, நீ கரடியாகக் கத்தினாலும் விடமாட்டேன் உன்னை. ரொம்பத் திமிறினே, எனக்குக் கெட்ட கோவம் வந்துடும். அப்புறம் நீ வீடுபோய்ச் சேரமாட்டே. உடம்பைப் புண்ணாக்கிக் கொள்ளாமெ நட வேகமா'' என்று அவனை இழுத்துக்கொண்டு போய் மைத்துனன் சொல்லியபடி புளிய மரத்தோடு கட்டிவைத்தான் முனிசாமி.

வந்தவன் அலற ஆரம்பித்தான். ''டேய் அப்பா, உன்னைக் கும்பிடறேன். என்னை அவிழ்த்து விட்டுடு. ரொம்ப அவமானமாக இருக்கிறதப்பா!'' என்று கெஞ்சினான். அடிபட்ட களைப்பினால் பெருமூச்சு வந்தது அவனுக்கு.

''செய்யறது திருட்டு; பேசுவது உருட்டு. இதிலே உனக்கு அவமானமாக வேறு இருக்கிறதோ கட்டிப் போட்டது? ஆளைப் பாரு ஆளை! தொந்தியும் தொப்பையும்

ஏன் இந்த மாதிரித் திருட்டுத் தொழிலிலே இறங்கறே? உழைச்சுச் சாப்பிடணும்பா. ஊரான் பொருளைத் திருடிப் பிழைக்கக் கூடாது'' என்று முனிசாமி உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கையில் கறுப்புச்சாமி தூரத்தில் வந்து கொண்டிருந்தான், அவனைப் பார்த்ததுமே, ''மச்சான் ஆளு அகப்பட்டுக் கொண்டான். ஓடி வா! ஓடி வா!'' என்று உரக்கக் கூவினான் முனிசாமி.



கறுப்புச்சாமிக்குத் தலை கால் புரியாமல் தடிக் கம்பை ஓங்கியபடியே ஓடி வந்தான் புளியமரத்தடிக்கு. வரும்போதே, ''எத்தினி நாளாடா நீ என்னை ஏமாற்றியிருக்கிறே! பாரு ஒரே போடுலே உன் மண்டையைப் பிளந்துடறேன்'' என்று தடியை ஓங்கினான். நல்ல வேளையாக, ஓங்கிய தடியை அப்படியே பிடித்துக்கொண்டு, கட்டப்பட்டிருந்த ஆளை உற்றுப் பார்த்தான் கறுப்புச்சாமி! அவ்வளவுதான். அவனுக்குத் திகில் உண்டாகிவிட்டது. ''என்ன காரியம் செய்துட்டே, முனிசாமி? தோட்டத்து முதலாளியையே கட்டி வச்சுட்டியே. முதலாளி, என்னை மன்னிச்சுடணும்'' என்று கட்டுகளை அவிழ்த்து விட்டுக் குமாரசாமிப் பிள்ளையின் கால்களில் விழுந்தான் கறுப்புச்சாமி.

விவரம் தெளிவாக விளக்கப் பட்டவுடன் முனிசாமியும் தோட்ட முதலாளியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ''உன் மேலே அவநம்பிக்கைகொண்டு உன் காவலைச் சோதிப்பதற்காக வந்தேன், கறுப்புச்சாமி. அதற்குத் தக்க பலன் கிடைத்துவிட்டது. இரவு வேளையிலே இவ்வளவு பெரிய வாழைத் தோட்டத்தைக் காவல் காப்பதற்கு ஒரு ஆள் போதாது என்பது இப்போதுதான் புரிந்தது. இன்னொரு காவல்காரனையும் நியமிக்கிறேன் நாளைக்கு'' என்றார் பிள்ளை. ''நாளைக்கி என்னங்க, இப்பவே நியமிச்சுடலாமே! என் மச்சினனும் வேலையில்லாமல்தான் இருக்கிறாரு. காவல் காக்கிறதிலே பெரிய புலி!'' என்றான் அவன். அவன் கேட்டுக்கொண்டபடியே முனிசாமி அந்தத் தோட்டத்திற்குத் துணைக் காவலாளியாக நியமிக்கப் பட்டான்.

மலைச்சாரலிலே...

வேங்கடேஷ்

'மங்கள பவன'த்தின் வாயிலில் நின்றிருந்த குதிரை கனைத்தது. ''இதோ வந்துவிட்டேன் ராஜா'' என்று பதிலளித்துக்கொண்டே மாளிகையின் உட்புறத்திலிருந்து ஓடோடியும் வந்தான் பிரபாகரன். ராஜா என்பது தன் குதிரைக்கு அவன் இட்ட செல்லப் பெயர். வந்தவுடன் குதிரையின்மீது தாவி ஏறினான்.

அப்போது உள்ளேயிருந்து ஓடி வந்த அவன் தந்தை ஜமீன்தார் ராமலிங்கபூபதி, ''பிரபாகர்! சற்று நில்!'' என்று கூறினார். குதிரை நின்றது. ''பிரபாகர், சீக்கிரம் திரும்பி வந்துவிடு. அதிக நேரம் தாமதித்து விடாதே! அந்தப் பக்கத்தில் கள்வர் பயம் அதிகமாம்'' என்று கவலையுடன் அவனைப் பார்த்தவாறே கூறினார். ''சரி அப்பா, பயம் வேண்டாம். விரைவில் திரும்பிவிடுகிறேன்'' என்று புன்முறுவலுடன் பதிலளித்துவிட்டுக் குதிரையைத் தட்டி விட்டான். அவன் தோளிலிருந்த வேட்டைத் துப்பாக்கி அசைந்து ஆடியது அவன் வீரத்திற்குக் கட்டியம் கூறுவது போலிருந்தது.

ஊர்க்கோடியை அடைந்த பிரபாகரை வரவேற்றான் அவன் நண்பன் சந்திரன். அவன் அவ்வூரிலேயே தன் மாமாவுடன் வசித்து வந்தான். இருவரும் ஒருநாள்கூட சந்திக்கத் தவறமாட்டார்கள். அவ்வளவு இணைபிரியாத நண்பர்கள்.

''அதிக நேரம் காக்க வைத்துவிட்டேனா சந்திரா?'' என வினவிய பிரபாகரை இடைமறித்தான் சந்திரன். ''அதனால் பரவாயில்லை. வா, போகலாம்'' என்று கூறினான். இருவரும் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு காட்டில் நுழைந்தனர். நடுப்பகல்வரை மிருகம் ஒன்றும் கண்ணில் படவில்லை. காட்டில் வெகு நேரம் அலைந்ததால் இருவருக்கும் களைப்புண்டாகவே, அருகிலிருந்த மாமரத்திலேறிக் கனிகளைப் பறித்து வயிறு நிறையத் தின்றார்கள். பக்கத்திலிருந்த ஓடைக்குச் சென்று நீர் அருந்திவிட்டு வந்து ஒரு மரத்தடியில் அமர்ந்தனர்.

பிரபாகருக்குக் காட்டில் இன்னும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஆசை. சந்திரனுக்கோ உண்ட மயக்கம் கண்ணைச் சுற்றியது தூக்கம்.

பிரபாகரன், ''சந்திரா, வா இன்னும் சிறிது தூரம் சென்று. இங்குள்ள இயற்கை வளங்களைச்

சுற்றிப் பார்க்கலாம்'' என அழைத்தான். ''நண்பா, இனி ஒரு அடிகூட என்னால் நடக்க முடியாது. என்னை மன்னித்துவிடு. நீ மட்டும் சென்று வா. நான் சிறிது இளைப்பாறுகிறேன். ஆனால் எக்காரணம் கொண்டும் நீலமலைப் பக்கம் போய் விடாதே. ஆபத்து!'' சொல்லும் போதே சந்திரனுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது.

''ஏன் அங்கே செல்லக்கூடாது சந்திரா?'' குரலில் மிகுந்த சந்தேகத்துடன் கேட்டான் பிரபாகர். அதற்குச் சந்திரன், ''வேண்டாம். அங்கே எவரும் செல்வதில்லை. அந்தப் பக்கத்தில் பிரபல கொள்ளைக்காரன் மாயத்தேவன் நடமாடுவதாக ஊரில் வதந்தி. அவன் ஒரு பயங்கரமான மனிதன். ஆகவே அந்தப் பக்கம் போய்விடாதே'' என்று கூறிவிட்டு நித்திரையில் ஆழ்ந்து விட்டான்.

பிரபாகருக்கு ஒரே வியப்பாக இருந்தது. எதைச் செய்யக்கூடாது என்று சொல்கிறார்களோ அதையேதான் செய்ய விழைகிறது மனித உள்ளம். ஆகவே அளவு கடந்த ஆவலால் உந்தப்பட்ட பிரபாகர் சந்தடி செய்யாமல் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

சுமார் இரண்டு மைல்களைக் கடந்து விட்டான். தூரத்தில் நீலமலை கம்பீரமாக விளங்கிற்று. அதைச் சுற்றிலும்தான் இயற்கை அன்னை தன் கைவண்ணத்தை எவ்வளவு அழகாகக் காட்டியிருந்தாள்! இந்தக் கண்ணுக்கினிய காட்சியைக் காணக்கூடத் தடை செய்தானே சந்திரன் என வருந்தினான் பிரபாகர்.

சுற்றிலும் ஒரு முறை கண்ணோட்டம் விட்ட பிரபாகர், 'ஐயோ! காப்பாற்றுங்களேன், யாராவது தூக்கி விடுங்களேன் என்று ஈனஸ்வரத்தில் யாரோ கத்தும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான். சத்தம் வந்த திசையை நோக்கினான். அருகிலிருந்த பள்ளத்திலிருந்து அந்த ஒலி கேட்டது. அருகில் சென்று பார்த்தான். பள்ளத்திற்குள் ஓர் ஆள் கிடந்து முனகிக்கொண்டிருந்தான். உடனே அவனைத் தூக்குவதற்காகப் பள்ளத்தில் இறங்கினான்.

கையை இரு பக்கங்களிலும் கொடுத்து அவனைத் தூக்குவதற்கு முயன்ற பிரபாகரின் கழுத்தை இரு முரட்டுக் கரங்கள் வளைத்துப் பிடித்தன. அந்த ஆளின் பிடியிலிருந்து தப்புவதற்காகப் பிரபாகர் எவ்வளவோ முயன்றான். முடியவில்லை. அந்தச் சமயம் அந்த ஆள் ஒரு சீழ்க்கை யடித்தான். உடனே பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. அடுத்த நிமிஷம் பிரபாகரின் தலைமேல் பலமான ஓர் அடி! அவன் நினைவு இழந்தான்.

கண் விழித்தபோது பிரபாகருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மொட்டைப் பாறையின்மீது தான் படுத்திருப்பதை உணர்ந்தான். சுற்றிலும் மலைத்தொடர்! யார் தன்னை அடித்தது? தன்னை ஏன் இந்த மனித நடமாட்டமற்ற இடத்திற்குக் கொண்டு வந்தார்கள் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

இடதுபுறம் திரும்பிய அவன் முகம் வெளிறிப்போயிற்று. பல முகமூடி உருவங்கள் கையில் கத்தி, வில் முதலிய ஆயுதங்களுடன் நின்றுகொண்டு பிரபாகரையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தன. அவற்றின் நடுவில் ஓர் உயரமான மனிதன், அவர்களின் தலைவன், அமர்ந்திருந்தான்.

பிரபாகர் எழுந்திருக்க முயற்சித்தான். பலமான அடிபட்டதால் தலை விண்விண்ணென்று தெறிப்பது போல் உணர்ச்சி ஏற்பட்டது. ''நான் எங்கிருக்கிறேன்?'' என்று ஈனஸ்வரத்தில் கேட்டான். ''சேர வேண்டிய இடத்தில்தான் இருக்கிறாய்''-தலைவனின்குரலில் ஆத்திரம் தொனித்தது. அதைத் தொடர்ந்து ஒரு பேய்ச் சிரிப்புக் கிளம்பி அந்த மலைப் பிரதேசத்தில் எதிரொலித்தது. பயமிகுதியால் பிரபாகர் நடுக்கத்துடன் கண்களை மூடிக்கொண்டான்.

''என்னை நீ பிடித்து வரக் காரணம் என்ன?'' என்று கேட்டான் பிரபாகரன், தனக்கிருந்தத் தைரியத்தை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டவனாக.

''வாயை மூடு! மரியாதையுடன் பேசு!'' மாயத்தேவனின் குரல் இடி முழக்கம் செய்தது.

''மக்களைக் கொள்ளையடிக்கும் உனக்கு மரியாதை எதற்கு? நான் கேட்பதற்குப் பதில் கூறு'' எனக் கடுமையாக மொழிந்தான் பிரபாகர்.

''பழி தீர்க்கும் படலம் வந்து விட்டது. சடையா! அவனை நமது குகைக் காளிமாதா கோவிலுக்குக் கொண்டு வாருங்கள்'' என ஆணை யிட்டுவிட்டுக் குகைக்குள் சென்று விட்டான் மாயத்தேவன்.

சடையனும் மற்ற ஆட்களும் பிரபாகரைத் தூக்கிக் கொண்டு தலைவனைப் பின்தொடர்ந்தனர். தனியொரு ஆளாக ஒன்றும் செய்ய முடியாத பிரபாகர் நண்பன் வார்த்தையை அலட்சியம் செய்த தன் செய்கையை எண்ணி வருந்தினன்.

* * *

மாலை மணி ஐந்தாகிவிட்டது. தன் மகன் இன்னும் வராததால் அமைதியை யிழந்த ராமலிங்க பூபதி குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தார். பிரபாகரைத் தேட முன்னதாகவே ஆட்களை அனுப்பியிருந்தார்.

சரியாக மணி ஐந்தரை. குதிரை ஒன்று வேகமாக வந்தது. ஆவலுடன் மகனைச் சந்திப்பதற்காக வெளியே ஓடிவந்த ஜமீன்தார் பெரிதும் ஏமாற்றமடைந்தார். குதிரையில் அமர்ந்திருந்தது சந்திரன். அவரது உள்ளம் ஏதோ ஒரு பயங்கரத்தை எதிர் நோக்கியது. குதிரையிலிருந்து இறங்கிய அவன் அவரருகில் ஓடிவந்தான். அவர் ஏதோ கேட்க வாயெடுப்பதற்குள் அவர் காதில் சில விஷயங்களை ரகசியமாகச் சொன்னன். அதற்கு அவர் பதிலைக்கூட அவன் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கணமே குதிரைமீது தாவி ஏறி வந்த வழியே பறந்து விட்டான்.

ஏதோ சிந்தனை செய்த ஜமீன்தாரின் கைகள் தாமாகப் போனை 'டயல்' செய்தன. போனில் ஏதோ பேசிவிட்டு விரைந்த அவர் அடுத்த ஐந்து நிமிஷங்களில் தமது 'பாண்டியாக்' காரில் பறந்துகொண்டிருந்தார், சந்திரன் சென்ற வழியை நோக்கி.

கண்களில் ரத்தவெறி தாண்டவமாடியது. கோரமான பற்கள், வெளியில் நீட்டிக்கொண்டிருந்த நாக்கின் இரு புறங்களிலும் காவல் காத்து நின்றன. ஐம்பதடி உயரம். இவற்றுடன் கூடிய காளியின் சிலை ஒரு தனிப் பயங்கரத்தை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது. அதன் எதிரே பலிபீடம். அதனருகில் பிர



பாகர் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டிருந்தான். மாயத்தேவன் கூறத் தொடங்கினான். ''சிறுவனே! கேள், உன்னைக் கொல்லப்போகும் காரணத்தை. உன் தந்தை ராமலிங்கபூபதிக்கு ஒரு தம்பி மகேந்திர பூபதியென்று இருந்தார்.''

பிரபாகர் இடைமறித்தான்; ''அவர் சுமார் 15 வருடங்களுக்கு முன் எங்கோ மறைந்துவிட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் இருக்கிறாரோ இறந்துவிட்டாரோ?''

''இறக்கவில்லையடா! - இதோ இருக்கிறேன் பார்'' தன் முகமூடியைக் கழற்றினான் மாயத்தேவன். தன் தந்தையைப்போன்ற அதே அச்சில் மற்றோர் உருவத்தைக் கண்டதும் ஆச்சரியப்பட்டான். ''சித்தப்பா!'' என்று ஆவலுடன் அழைத்தான். ''போதும் நிறுத்து! சாவதற்கு முன் நான் சொல்வதை முழுவதும் கேள். எங்கள் தந்தை சோமசேகரபூபதி இறக்கும்போது எங்களிருவருக்கும் சமான சொத்துக்களை அளித்துவிட்டுப் போனார். சகவாச தோஷத்தின் விளைவாக என் சொத்துக்கள் முழுவதும் விரைவில் கரைந்து விட்டன. அத்துடன் கடனாளியாகவும் ஆனேன். சாப்பாட்டிற்குக்கூடக் கஷ்டமான நிலை. இந்த நிலையில் என் மனைவி இரண்டாவது குழந்தைக்குத் தாயானாள். முதல் குழந்தை நோய்வாய்ப்பட்டது. உன் தந்தையாகிய என் அண்ணனிடம்சென்று கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினேன். ''அண்ணா, குழந்தையின் உடல் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது'' என்று கெஞ்சினேன். அவர் என்னை எட்டி

உதைத்து, ''சாகட்டும். நீயும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாவதுதானே!'' என்று ஏளனமாகப் பேசி என்னை மாளிகையிலிருந்தும் துரத்திவிட்டார். கவலையுடன் வீடு திரும்பினேன். என் ஏழை மைத்துனர் சொக்கேசரும் என் மனைவியும் என் புதல்வனின் அருகில் அமர்ந்திருந்தனர். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த என் செல்வன் அன்று இரவு என்னைத் தவிக்க விட்டுச் சென்றுவிட்டான். அதே அதிர்ச்சியில் என் மனைவியும் அன்றே இறந்துவிட்டாள். ஒரே சமயத்தில் என் அன்புச் செல்வங்களைப் பறிகொடுத்த நான் ஆதரவற்ற நிலையில் மேலும் அவ்வூரிலிருக்க விரும்பவில்லை. என் சின்னஞ்சிறு இரண்டாவது புதல்வனை சொக்கேசரிடம் ஒப்புவித்துவிட்டு நான் அவ்வூரைவிட்டு வெளியேறினேன். அவனை என் மகனென்று யாரும் அறியாதபடி வளர்க்கும்படி அவரிடம் வேண்டிக்கொண்டேன்.

''சுமார் இரண்டு ஆண்டுகள் தூரதேசங்களில் சுற்றினேன். நான் சென்ற மறு வருஷம் என் அண்ணி ஓர் ஆண் மகவை ஈன்று மடிந்ததறிந்து வருந்தினேன். அந்த உத்தமி என்னைப் பிள்ளைபோல் பாதுகாத்தவள். அதே சமயம் என் செல்வன் உயிர் நீத்த காட்சி மனக் கண்முன் தோன்றியது. என் கொலை வெறி அதிகமாக ஆக நான் பயங்கரவாதியாக மாறினேன். மகேந்திர பூபதி மாயத்தேவனானேன். நான் இதுவரை யாரையும் கொலை செய்ததில்லை. என்னை உதாசீனப் படுத்திய என் அண்ணனைப் பழி வாங்க அவன் மகனைக் கொன்று அவன் அடையும் புத்திர சோகத்தைக் காண வேண்டும். கண்டு களிக்க வேண்டும். அப்போதுதான் என் மனம் நிம்மதியடையும்.

''நான் ஊருக்குள் பகிரங்கமாக வந்தால் என்னை ஊரார் அடையாளம் கண்டு பிடித்துவிடுவது நிச்சயம். உன்னைத் தூக்கிவர இரண்டு வருடங்களாகத் திட்டம் போட்டேன். அது நிறைவேற்றப்படுமுன் நீயாகவே

வந்து என் வலையில் சிக்கினாய். இதே ஊரிலிருந்தும் என் மகனை நான் இதுவரை பார்க்க முற்படவில்லை. காரணம் பழி வாங்கும் வெறியில் ஈடுபட்டதால்தான். எனக்கு வேண்டியது பணமல்ல. பழிக்குப் பழி; உயிருக்கு உயிர். இதோ அதை நிறைவேற்றப் போகிறேன் என் கையாலேயே!'' இடைவிடாமல் பேசியதால் மாயத்தேவனுக்கு மூச்சு வாங்கியது. கையிலிருந்த பிச்சுவாவை எடுத்தான்.

''வேண்டாம், சித்தப்பா!-'' பயங்கரமாக அலறினான் பிரபாகர். ''ஓங்கிய கை தாழாது, தம்பி!'' பேய் போலச் சிரித்தான் தேவன்.

'படார்' என்று சத்தம். அடுத்த விநாடி மாயத்தேவன் கையிலிருந்த கத்தி எகிறியது. 'ஐயோ!' என்று கையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

ஒரே சமயத்தில் அனைவரது கண்களும் குண்டு வந்த திசையை நோக்கின. கையில் பிரபாகரின் இரட்டைக் குழல் துப்பாக்கியுடன் சந்திரன் நின்றுகொண் டிருந்தான். ''பிரபாகர், நான் சொன்னதை அலட்சியம் செய்தாயே! நான் திடீரென்று விழித்துக்கொண்டு நேரே உன் தந்தையிடம் ஓடி நீ காணமற்போன விவரத்தைக் கூறிவிட்டு, சமயத்தில் இங்கு வந்தேனே! இல்லாவிடில் உன் கதி என்னவாயிருக்கும்?'' என்று கூறிய சந்திரன், பேச்சுவாக்கில் பின்புறமாக வந்த சடையனையும் இருளாண்டியையும் கவனிக்கவில்லை எதிர்பாராதவிதமாக அவனை இருவரும் பிடித்து அமுக்கினர். அதே சமயம், ''எல்லோரும் கையை மேலே தூக்குங்கள்!'' என்ற அதிகாரக் குரல் கேட்டது. திடுக்கிட்டுக் கையைத் தூக்கினர் அனைவரும். அங்கே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாந்தலிங்கம், ஒரு பெரும் போலீஸ் படையுடன் நின்றிருந்தார்.

மாயத்தேவன் உள்பட எல்லாத் திருடர்களும் கைது செய்யப்பட்டனர். அனைவரும் போலீஸ் வானில் ஏற்றப்படும் சமயம், ராமலிங்க பூபதியும், சொக்கேசரும் வேகமாக அங்கே ஓடிவந்தனர். ஜமீன்தார் வரும்போதே ''பிரபாகர்'' என் றலறிக்கொண்டே வந்தவர் கையில் விலங்குடன் நின்ற மாயத்தேவனைக் கண்டதும், ''தம்பி! மஹேந்திரா!'' என்று அவனை இறுகத் தழுவிக்கொண்டு கண்ணீர் வடித்தார். ரத்தபாசமோ என்னவோ, மஹேந்திரரும் விம்மி விம்மியழுது விட்டார். ''அண்ணா! என்னை மன்னித்துவிடுங்கள். ஆத்திரத்தில் அறிவிழந்தேன். தக்க சமயத்தில் என் மகனே எனக்குத் தண்டனையளித்து, தன் தம்பியைக் காத்தான்'' என்று அண்ணனின் கால்களில் விழுந்து அழுதார்.

ராமலிங்க பூபதி கண்களில் நீர் ஆறுகப் பெருக, ''தம்பீ. நீதான் என்னை மன்னிக்கவேண்டும். நீ பொய் சொல்வதாக நான் எண்ணி அன்று உன்னை அடித்து, அவமதித்து உதவியளிக்காமல் விரட்டியதால் தானே இவ்வளவும் நேர்ந்தது! என்னை மன்னித்துவிடு'' என்றார்.

''அதிருக்கட்டும், சந்திரன் உன் மகனா? எனக்கே தெரியாதே! 15 வருஷங்களாக ஊர்ப்பக்கம் வராத நீ எப்படி அறிந்தாய்!'' என்று ஆச்சரியத்துடன் வினவினார். ''என் வேண்டுகோளின்படி அவன் அவ்வாறு வளர்க்கப்பட்டான், அண்ணா. நான் அவனைப் பார்க்காவிடினும், அவன் நெற்றியிலிருந்த மீன்வடிவ மச்சமும், அவன் அன்னையைப் போன்ற முக அமைப்புமே எனக்கு அவன் யாரென்பதை அறிவித்துவிட்டன'' என்று மஹேந்திர பூபதி பதிலளித்தார்.

சந்திரன், ''அப்பா'' என அலறினான். ஓடிவந்து மஹேந்திரரைக் கட்டிக்கொண்டான். ''கண்ணே! அழாதே! எல்லாம் விதியின் விளையாட்டு!'' என அவனை ஒருவாறு தேற்றி அவன் கைகளைப் பிடித்துத் தன் அண்ணனின் கைகளில் கொடுத்து, ''அண்ணா! சட்டம் எனக்குச் சிறை, அல்லது மரண தண்டனை விதிக்கலாம். எது எப்படியிருப்பினும் நீங்கள்தான் இனி அவனுக்குத் தந்தை. வருகிறேன் அண்ணா'' என்று கூறிவிட்டுப் போலீஸ் வானில் ஏறிக்கொண்டார்.

போலிச் சாமியார்

'ராமு'

“சுந்தர்! சுந்தர்!”

தோட்டத்தில் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சுந்தர் தன் தாயின் குரலைக் கேட்டதும் விரைந்து வந்தான். “சுந்தர்! உன் மாமா உன்னை இந்தக் கோடை விடுமுறைக்குத் திருச்சிக்கு வரச் சொல்லியிருக்கிறார். போகிறாயா?” என்று கேட்டாள் சுந்தரின் தாயார்.

“ஓ! ரெடி. நான் போகிறேனம்மா” என்று கூறிவிட்டு இந்தச் சந்தோஷச் செய்தியைத் தனது நண்பர்களிடம் கூற ஓடினான் அவன்.

சுந்தரின் தகப்பனார் அவன் சிறுவனாயிருக்கும்பொழுதே இறந்துவிட்டார். ஏதோ அவர் வைத்துவிட்டுச் சென்ற நிலபுலன்களை வைத்துக்கொண்டு சுந்தரின் தாயார் தனது ஒரே பிள்ளையான அவனைச் செல்லமாக வளர்த்து வந்தாள். சுந்தரும் குடும்ப நிலையை உணர்ந்தவனாக ஒவ்வொரு வகுப்பிலும் முதல்வனாகத் தேறி இப்பொழுது ஐந்தாம் பாரம் படிக்கிறான். சுந்தரின் மாமா திருச்சியில் போலீஸ் இலாகாவில் சப் - இன்ஸ்பெக்டராக இருந்தார்.

* * *

குறித்த நாள் வந்தது. சுந்தரும் அவன் தாயாரும் ரெயிலடியை அடைந்தனர். தாயின் மனத்தில் மகனைப் பிரிய வேண்டுமே என்ற சோகம் நிலவியது 'கூ....' எனக் கூவிக்கொண்டே ரெயிலும் வந்தது.

“சுந்தர், ஜாக்கிரதையாகப் போ; போனவுடன் கடிதம் எழுது” என்றாள் அவன்தாயார், நாத் தழுதழுக்க.

“ஆகட்டும் அம்மா” என்றான் சுந்தர். பிரிவினால் ஏற்பட்ட கண்ணீர் எதிரே இருந்தவைகளை மறைத்தது.

'கூ..' ரெயில் கிளம்பியது.

வெளியே உற்று நோக்கிக் கொண்டிருந்த சுந்தர் உள்ளே திரும்பினான். அவனது பெட்டியில் அவ்வளவு கூட்டம் இல்லை. நான் கைந்து பேர்களே ஏறியிருந்தனர். சுந்தரின் கவனம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சாமியாரின் மீது சென்றது. அவர் ஒரு புலித் தோலின்மீது உட்கார்ந்திருந்தார். உடலெங்கும் விபூதியைப் பட்டை, பட்டையாகப் பூசியிருந்தார். சுந்தர் தம்மையே நோக்குவதைக் கண்ட அந்தச் சாமியார், “தம்பி! உன் பெயரென்ன? எந்த ஊர் போகிறாய்?” என்று கேட்டார்.

“என் பெயர் சுந்தர். திருச்சி வரை போகிறேன்”

திருச்சி என்ற பெயரைக் கேட்டதும் சாமியாரின் முகபாவம் சிறிது மாறியது. அவர் சட்டெனச் சமாளித்துக்கொண்டார். இதைச் சுந்தர் கவனிக்கவில்லை. பின்பு சுந்தரும் சாமியாரும் நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

ரெயில் பொன்மலையை நெருங்கியது. அந்தப் பெட்டியில் அவனைத் தவிர சாமியார் மட்டுமேயிருந்தார். மாலை நெருங்கியது. சுந்தருக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. தாயார் கட்டிக் கொடுத்த பொட்டலத்தை அவிழ்த்தான் அவன். அதில் இட்லியும் சட்டினியும் இருந்தன. அதை ஒரு கை பார்த்த பின்பு தான் கொண்டு வந்த பிளாஸ்கைத் திறந்து அதிலிருந்த காபியைத் தம்ளரில் கொட்டினான். பின்பு கையை அலம்பிவிட்டு வர ஜன்னலருகில் சென்றான். இதுபோன்ற சமயத்தை எதிர்ப்பார்த்திருந்த சாமியார் உடனே தம் காரியத்தை முடித்துக் கொண்டார். இதைக் கவனிக்காத

சுந்தர் கை கழுவியதும் தனது இடத்திற்கு வந்து காபியைச் சுவைக்க ஆரம்பித்தான். குடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவனுக்குத் தலையைச் சுற்றியது. கண்கள் இருண்டன. சிறிது நேரத்துக்கெல்லாம் சுந்தர் தன் நினைவிழந்து கீழே சாய்ந்தான். சாமியார் உடனே அவனைத் தன் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டார். சாமியாரின் அதிருஷ்டம் ரெயில், ஸ்டேஷனை நெருங்கியும் 'கை' இறங்காததால் சற்று நின்றது. உடனே ரெயிலிலிருந்து குதித்து இருளோடு இருளாக மறைந்து போனுர் சாமியார்.

* * *

சூரிய ஒளி சுள்ளென்று தாக்கியது. சுந்தர் சிரமப்பட்டுக் கண்களைத் திறந்தான். தாம் எங்கிருக்கிரும் என்பதே அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் உற்றுக் கவனித்து, தான் ஒரு மலைக்குகையில் இருக்கிருேமென ஊகித்துக் கொண்டான். அங்கே எப்படி வந்தோம்? சுந்தருக்குப் பளிச் சென்று முதல் நாளைய அநுபவம் நினைவுக்கு வந்தது. தான் காபி சாப்பிட்டவுடனே மயக்கமாக விழுந்தோம் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. தான் கை கழுவப் போயிருந்தபொழுது அந்தச் சாமியார்தான் காபியில் மயக்க மருந்தைக் கலந்திருக்க வேண்டுமென ஊகித்துக்கொண்டான். தன்னை இவ்வாறு அந்தச் சாமியார் ஏன் கொண்டுவர வேண்டுமென்பது அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

சட்டென்று யாரோ இருவர் பேசிக்கொண்டு வரும் சத்தம் கேட்டது. சுந்தருக்குத் தான் இப்பொழுது தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதே நல்லது எனப்பட்டது. குகையின் சமீபம் நெருங்கியதும் அவர்கள் ஒரு விசையை அழுத்துவது போன்ற சத்தம் கேட்டது. சுந்தர் லேசாகக் கண்ணைத் திறந்து கவனித்தான். குகையை மூடிக்கொண்டிருந்த பெரிய



பாருங்கல் தடாலென்ற சத்தத்துடன் விலகியது. சுந்தர் தன்னை நோக்கி அந்த ரெயில் சாமியாரும் அவர் பக்கத்தில் ஒரு முரடனும் வருவதைக் கவனித்தான்.

அவன் அருகில் வந்ததும் அச் சாமியார், ''ஏய் கறுப்பா, இன்னும் இந்தப் பையனுக்கு நினைவு வர வில்லை போலிருக்கிறதே!'' என்ருர்.

''நீங்க கொடுத்த மருந்து நல்லா வேலை செய்யுது எஜமான்'' என்ருன் கறுப்பன்.

''சரி, கறுப்பா! இன்று இரவே இவர்களை அழைத்துக்கொண்டு பினுங்கு புறப்படத் தயாராக இரு. பின்னுல் நமது ரகசியக் கிடங்கில் பதினைந்து பேர் இருக்கிருர்கள். இது போதும். சரி, நீ சிறிது நேரம் கழித்து வந்து இவர்கள் அனைவருக்கும் கொஞ்சம் உணவு கொடு. நானும் எனது வேலையை முடித்துக்கொண்டு அப்புறம் வருகிறேன்'' என்று கூறி, சாமியார் கறுப்பனுடன் வெளியில் போய்விட்டார். முன்புபோல அவர்கள் ஒரு விசையை அழுத்துவதையும் உடனே குகையின் வாசல் மூடிக்கொள்வதையும் கவனிக்கத் தவறவில்லை சுந்தர்.

சிறுவர் சிறுமிகளைக் களவாடி, அவர்களைப் பினுங்கிலுள்ள பெரிய பெரிய தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்குப் பணம் பெற்றுக் கொண்டு விற்றுவிடும் மாபாதகர் கூட்டம் என்பதைச் சுந்தர் அறிந்துகொண்டான். இனி ஒரு முறை அம்மாவைக் காணப் போகிருேமோ இல்லையோ என்ற ஐயம் அவன் மனத்தில் எழுந்தது. தனது தாய் தந்தையரைப் பிரிந்து தவிக்கும் அந்த இளம் பிஞ்சு உள்ளங்களின் தவிப்பை எண்ணிப் பார்த்தான். அவர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டான் அவன். இவ்வாறு யோசித்தவாறே அச் சிறுவர் சிறுமிகள் எங்கே இருக்கிருர்கள் எனக் குகையெங்கும் சுற்றிப் பார்த்தான். கண்டு பிடிக்க முடியவில்லை. அவர்கள் எங்கேயாவது தெரியாத இடத்தில் அடைக்கப்பட்டிருக்க வேண்டுமென நினைத்தான். அந்தக் குகையெங்கும் பெரிய பெரிய துப்பாக்கிகளும் கத்திகளும், ஈட்டிகளும் சிதறிக் கிடந்தன. அதைக் கண்டவுடன் கரிய வானில் மின்னல் பளிச்சிடுவதுபோலத் தான் தப்பித்துக் கொள்ள சுந்தருக்கு வழி தோன்றியது. உடனே அங்கேயிருந்த ஒரு பெரிய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தன் இருப்பிடத்திற்கு வந்தான் சுந்தர்.

அப்பொழுது யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. உடனே துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அடிமேலடி வைத்துக் குகையருகில் சென்று அங்கே ஓர் ஒதுப்புறமாக நின்றுகொண்டான் சுந்தர். அங்கே அவன் காலில் ஒரு பெரிய கல் தடுக்கியது. அதை வெளியிலிருந்து உள்ளே அவர்கள் வரும் வழியில் வைத்தான். அவன் எதிர்பார்த்தது போலவே சிறிது நேரத்திற்கெல்லாம் குகையின் வாசல் திறந்து கொண்டது. விர்ரென்று உள்ளே வந்த கறுப்பன் மங்கலான வெளிச்சத்தில் சரிவரக் கண் தெரியாமல் கல் தடுக்கிக் குப்புற விழுந்தான் இதுதான் சமயமெனக் காத்திருந்த சுந்தர் தான் வைத்திருந்த துப்பாக்கி மட்டையால் அவன் தலையில் ஒரு போடு போட்டான். எதிர்பாராத இந்தத் தாக்குதலால் திக்பிரமையடைந்த கறுப்பன் சமாளித்து எழுவதற்குள் அவனது நெற்றிப் பொட்டில் இன்னொரு பலத்த அடி விழுந்தது. கறுப்பன் மூர்ச்சையாகிவிட்டான். வேகமாக வெளியே வந்த சுந்தர் அந்த ஸ்விட்சுக்காகத் தேடினுன். அதைக் கண்டு பிடித்து அந்த ஸ்விட்சை அழுத்தியதும் குகையின் வாசல் மூடிக் கொண்டது. உடனே பக்கத்திலிருந்த ஒற்றையடிப் பாதையின் வழியாக வேகமாக ஓட ஆரம்பித்தான் அவன். ஒரு கால் மணி நேரம் ஓடியிருப்பான். திடீரென்று ஏழு, எட்டுப் பேர்கள் தடதடவென்று நடந்துவரும் சத்தம் கேட்டது. சுந்தர் மனம் நடுங்கியது. சாமியார்தான் தம் வேறு சகாக்களுடன் வருகிருரோவென நினைத்தான். அப்பொழுது சுந்தர் கனவிலும் எதிர்பார்க்க முடியாத அந்த ஆச்சரியத்தைக் கண்டான். அவன்



மாமாவே போலீஸ் உடுப்புடன் ஆறு கான்ஸ்டேபிள்கள் சூழ வந்துகொண்டிருந்தார். உடனே, "மாமா! மாமா!" என்று அலறி அடித்துக்கொண்டு ஓடி, அவர் காலைப் பிடித்துக்கொண்டான் சுந்தர். அவன் மாமாவும் திடீரென அவனை இவ்விதம் கண்டவுடன் திகைத்து நின்றுவிட்டார். சுந்தர் கிளம்பிவிட்டான் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. எனவே அவர் அவன் வந்து சேரவில்லையே எனக் கவலைப் பட்டுக்கொண்டிருந்தார். இப்பொழுது சுந்தரைக் கண்டவுடன் கொள்ளை மகிழ்ச்சி அவருக்கு.

"சுந்தர்! என்னப்பா? இங்கே எப்படி வந்தாய்?" என்று பரபரப்புடன் கேட்டார் அவன் மாமா.

சுந்தர் நடந்த விஷயங்களைச் சுருக்கமாகக் கூறினான். அவன் அந்தத் திருட்டுச் சாமியாரைப்பற்றிக் கூறியவுடன் ஒரு துள்ளுத் துள்ளினார் அவர்.

"சுந்தர், அந்தச் சாமியார் இருக்குமிடம் உனக்குத் தெரியுமா? இத்தனை நாளாக அவனைத் தேடியே அலைகிறேன். இங்கே இருப்பதாக எனக்குத் தகவல் எட்டியது. அதனாலேயே இவர்களை அழைத்துக் கொண்டு இவ்விடம் வந்தேன்" என்றார்.

பின் அவர்களை அழைத்துக் கொண்டுக் குகையை நோக்கி விரைந்தான் சுந்தர்.

* * *

இதற்குள் குகையில் சம்பவங்கள் துரிதமாக நடக்க ஆரம்பித்தன. சுந்தர் குகையை விட்டுக் கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் சாமியார் தம் வேலையை முடித்துக்கொண்டு குகையை வந்தடைந்தார். ஸ்விட்சை அழுத்தியதும் வாசல் திறந்துகொண்டது. உள்ளே யாரோ படுத்திருப்பதுபோல் மங்கலாகத் தெரிந்தது. சாமியாருக்குச் சட்டென சந்தேகம் எழுந்தது. அந்த ஆளின் அருகே சென்று உற்று நோக்கினார். கறுப்பனைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது சாமியாருக்கு. அவன் மூர்ச்சையாயிருப்பதைக் கண்ட சாமியார் உடனே சிறிது தண்ணீர் கொண்டுவந்து அவன் முகத்தில் தெளித்தார். கறுப்பன் உடனே மெதுவாகக் கண்ணைத் திறந்தான். பொட்டில் சரியான அடி. வலி சுள்ளென்றெடுத்தது. அவனைச் சுற்றிலும் ரத்தம்

பெருக்கெடுத்திருந்தது. கறுப்பன் மெதுவாகச் சுந்தர் தப்பிவிட்ட விஷயத்தைக் கூறி போலீஸ் வந்தால் தங்கள் பாடு திண்டாட்டமெனக் கூறினான். கறுப்பன் தன்னால் நடக்க இயலாதென்றும் தாங்கள் இருவரும் தப்பிக்க ஏதாவது வழி செய்யுமாறும் சாமியாரை வேண்டினான். ஆனால் அந்தச் சுயநலச்சாமியாரோ கறுப்பனை அழைத்துக்கொண்டு போவதற்குள் போலீஸ் எங்கே வந்துவிடுமோ என்று பயந்து அவனை அவ்விடமே விட்டுவிட்டுத் தான் மட்டும் ஓடத் திட்டம் போட்டுக்கொண்டான்.

''திருட்டுப் பயலே! அந்தச் சிறு பையனிடம் ஏமாந்து கோட்டைவிட்டுவிட்டு நிற்கிறாயே! நீ இங்கேயேயிருந்து மாட்டிக்கொண்டு செத்து ஒழி'' என்று கூறிய சாமியார் அவனை அந்த நிலையிலேயே விட்டுவிட்டுக் குகையின் வாயிலை மூடிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். இந்தச் சமயம்தான் சுந்தர் தன் மாமா முதலியவர்களுடன் அவ்விடம் வந்தடைந்தான்.

சுந்தர் சாமியாரைப் பார்த்துவிட்டான். உடனே தன் மாமாவிடம், ''ஓடுங்கள், அதோ, அந்தச் சாமியார் ஓடுகிறான்'' என்றான். அவர் துரத்திச்சென்று சாமியாரைப் பிடித்துவிட்டார். சாமியார் திமிறிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். அப்பொழுது சாமியாரின் தாடி நழுவிக் கீழே விழுந்துவிட்டது. சுந்தரின் மாமா ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தார். பார்த்தால் போலீஸையே ஒரு காலத்தில் கிடுகிடுக்க வைத்த பக்காக் கேடி காத்தவராயன் அங்கே நிற்கிறான். அதற்குள் சுந்தருடன் அங்கு வந்த போலீஸார் அவன் கைக்கு விலங்கிட்டனர்.

பிறகு அனைவரும் குகைக்குச் சென்றனர். அங்கே கறுப்பன் தலையிலிருந்து அதிக ரத்தம் வெளியேறிவிட்டதால் சாகும் நிலையிலிருந்தான். தனக்குத் துரோகம் செய்த சாமியார் சிறைப்பட்டிருப்பதைக் காண அவனுக்குப் பரம சந்தோஷம். அவன் சுந்தரின் மாமாவிடம், ''நான் செய்த பாவங்களுக்குத் தகுந்த முடிவு கிடைத்துவிட்டது. நான் இன்னும் சிறிது நேரத்தில் இறந்துவிடுவேன். அதற்குள் அதற்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்புகிறேன்.'' என்று கூறிவிட்டு, அந்தச் சிறுவர்களை அடைத்து வைத்திருக்குமிடம், அவர்கள் எங்கிருந்து களவாடப்பட்டனர் என்ற விவரங்களைக் கூறினான். பிறகு சுந்தரின் மாமா அவனிடமிருந்து மரண வாக்குமூலம் பெற்றுக்கொண்டார். பின்னர் அனைவரும் அந்தச் சிறுவர் சிறுமிகளை விடுதலைசெய்து, அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு திருச்சிக்குத் திரும்பினர். குழந்தைகளெல்லாம் அவரவர் பெற்றோர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டனர்.

அந்தக் கள்ளச் சாமியாருக்கு ஆயுள் முழுவதும் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. சுந்தருக்கு அரசாங்க வெகுமதியாக ஆயிரம் ரூபாய் கிடைத்தது. சுந்தரின் புகைப்படத்துடன் பத்திரிகைகளிலெல்லாம் முதல் பக்கத்தில் இந்தச் செய்தி கொட்டை எழுத்துக்களில் காணப்பட்டது.

பாப்பாவும் பொம்மையும்

அந்த வீட்டு மாமி தன் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். அப்போது அடுத்த வீட்டுப் பெண் ஒரு கையும் காலும் போன பொம்மையைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

''உங்க பாப்பாவுக்கு என்ன வயசாகிறது, மாமி?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

''ஆறு மாசம் ஆகிறதடி கண்ணு!'' என்றாள் மாமி.

''தேவலையே. நீங்க அந்தப் பாப்பாவின் காலையும் கையையும் ஒடைக்காமெ வச்சிருக்கிறீர்களே! நீங்க சமத்து மாமி!'' என்றாள் அந்தப் பெண்.

வேணுவின் சைக்கிள்

மூணு சக்கர சைக்கிள்;
முப்பது ரூபா சைக்கிள்—எங்கள்
வேணு வந்து ஏறிக்கொண்டால்
வேகம் போதும் சைக்கிள்!

மாமா தந்த பரிசு;
மாடல் ரொம்பப் புதிசு—தண்டுச்
சாமா நீயும் ஏறிடாதே
சைக்கிள் ரொம்பச் சிறிசு!

கேட்டைத் திறந்து வைடா, அதோ
கேளு சைக்கிள் பெல்லு—அடே
வாட் இன்னமும் நகரலை நீ?
வழியை விட்டு நில்லு!

மெதுவா மெதுவா வாடா; ராஜா
மெதுவா வந்தி றங்கு—அடே
மெதுவா ஓட்ட வரல்லைஎன்றால்
மேலே வந்து தூங்கு!

—'லெமன்'

10. சுரேஷ் எங்கே?

நீச்சல் போட்டி நடந்து இருபது தினங்கள் ஆகிவிட்டன. அதற்குள்தான் எத்தனை மாறுதல்? ஓர் உயிர் நஷ்டம். மனக் கஷ்டம். இவ்வளவிலும் அவர்களது ஆராய்ச்சியிலோ துப்புத் துலக்குவதிலோ குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதாவது ஏற்பட்டிருந்ததா என்றால், சற்றுத் தயங்கித்தான் பதில் கூறமுடியும்! அதற்காக அவர்கள் பட்ட பிரயாசைதான் என்ன! மற்றவர்கள் உதவியில்லாமல் இவர்கள் இருவருமே காரியத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்லமுடியுமா? என்னதான் இருவரும் கெட்டிக்காரர்கள் - ஜீனியஸ் - என்று வைத்துக் கொண்டாலும்கூட அநுபவம் என்பது அவர்களுக்குக் கிடையாதே! ஒரு சாதாரண கான்ஸ்டபிள்கூட பலபல கேஸ்களைக் கண்டுபிடித்து 'அநுபவம்' என்ற ஒன்றைப் பெற்றிருப்பான்.

ஆனால் சுரேஷ், சேகர் இவர்கள் விஷயத்தில்..?

ஆலன் போ, ஆஸ்கார் வொய்ல்ட், ஸர் ஆர்தர் பாய்லி போன்றவர்களின் அற்புதமான நாவல்கள் என்னதான் தத்ரூபமாயும், பொறி வைக்கப்பட்டதாயிருந்தாலும்கூட அநுபவம் என்ற ஒன்றை மருந்துக்குக்கூட அளிக்கவில்லையே? டாக்டர் பட்டத்திற்குத் தேவையான புஸ்தகங்கள் மட்டும் உன் கையில் கிடைத்தால் போதுமா? நீ அவற்றை உருப்போட்டுப் பரீக்ஷையில் 'மார்க்' வாங்கிவிட்டாலும் லேபரடரி ஒர்க்ஸில் என்ன செய்யமுடியும்?

தற்போதுதான் ஒரு பேருண்மையை அறிந்தனர் இருவரும். கதைகளில் எட்டு வயதுப் பையன் முப்பது வயதுக் கேடியைப் பிடித்து விடுவதாக யாவரும் நம்பும்படி எழுதுவது சுலபமாயிருக்கலாம். அவர்கள் 'வாழ்வில்' இதைச் சாத்தியக் கூறுக்க முடியுமா? சூழ்நிலை என்பது சரியான சந்தர்ப்பம் ஒன்றைக் கொடுத்து அவர்களுக்கு வழி காட்டிவிட்டது. ஆனால் இருட்டும் நேரத்தில் அந்த வழியில் டார்ச் லைட் இல்லாமல் முன்னேறுவது கஷ்டமாயிற்றே?

ஏதோ வீம்புக்குத் தாங்களே முயற்சி செய்துவிட்டு, துப்புகளையும் கண்டுபிடித்துவிட்டுக் கடைசி நிமிஷத்தில் போலீஸாருக்குத் தகவல் கொடுத்துவிடலாம் என்று தீர்மானித்து விட்டனர். போகப் போகத்தான் அவர்களது தீர்மானம் மாறத் தொடங்கியது. ஜிம்மியின் நஷ்டம் அவர்களுக்கும் விரைவில் ஆபத்தேற்படுமென்பதை நன்றாக எடுத்துக் காட்டிவிட்டன. இருவரும் இவ்விஷயத்தைக் குறித்து விரிவாகத் தர்க்கம் செய்ய ஆரம்பித்தனர்.

அவர்களது முயற்சிகளும் இதுவரை வீண் போகவில்லை. உபயோககரமான சில விஷயங்களைச் சேகரித்தும் விட்டனர்!

ஆகவே 'காலம் வந்துவிட்டது' என்றும் கொள்ளலாம் அவர்கள் மாறுதலுக்கு.

மார்மப் பாதை, சுரங்கம் போன்றவைகளை இருக்குமிடம் மட்டும் அறிந்தால் போதாது. பாம்பின் புற்றைத் தகர்த்துவிட்டால், அது வேறிடத்துக்குச் செல்கிறது. இல்லாவிட்டால் தகர்த்தவனின் வீட்டிலேயே மோட்டு வளையில் பதுங்கிக் கொள்கிறது! அதன் நடமாட்டங்களைப் பற்றி ஓரளவு தகவல்களும் வேண்டும். அதைக் கண்டுபிடிக்கும் எல்லையை அடைந்துவிட்டனர் இந்த இரட்டையர்.

மேற்கொண்டு துப்புத் துலக்க வேண்டுமென்றாலும் போலீஸ் உதவியிருந்தால் எவ்வளவு நல்லது? போலீஸ் உயர் வட்டாரங்களை அணுகுவதாகத் தீர்மானம் செய்தனர் இருவரும். அந்தத் தீர்மானத்தில் மற்றுமொரு சௌகரியமும் இருந்தது அவர்களுக்கு.

ஆம். . சங்கத்தின் காரியதரிசிகளான இருவருக்கும் கலெக்டரின் அறிமுகம் இருந்ததென நமக்கு முன்பே தெரியும். அவரையே முதலில் சந்திக்க நிச்சயித்தனர் அவர்கள்.

அன்று மாலை, சேகர் திருச்சி ஜில்லா கலெக்டருக்கு 'எக்ஸ்பிரஸ் தந்தி' ஒன்று அனுப்பினன், வெகு முக்கியமான சில விஷயங்கள் குறித்து அவரைச் சுரேஷ் சந்திக்க விருப்புவதாக,



மறுநாள் காலையிலேயே, பதில் தந்தி கிடைத்துவிட்டது.

தாம் உயர்தர உத்யோகஸ்தர் மகாநாடு ஒன்றில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால் இரண்டு நாள் கழித்து எபபோது வேண்டுமானாலும் அவர்களை மகிழ்வுடன் வரவேற்பதாக கலெக்டர் கூறியிருந்தார். தாமதமும் நல்ல விதத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டது இருவராலும்.

அவர்களது நடையுடை பாவனைகளிலும் தற்போது நல்ல மாறுதல் ஏற்பட்டிருந்தது. ஆம். . கடந்த சில நாட்களின் கடுமையான ஒத்திகைதான் இதற்குக் காரணம். . !

பழைய 'சுரேஷ்' தற்போது மறைந்துவிட்டான்! சந்தர்ப்பங்கள் தற்போது கடுமையாக இருந்தன. ஜிம்மி மறைவிலிருந்து, யாரையும் நம்பமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. ஆகவே முன்னெச்சரிக்கையுடன் யாவற்றையும் செய்ய வேண்டியிருந்தது,

சுரேஷ் தன் உடைகளையும் மாற்றிக்கொண்டு விட்டான். கேசத்தையும் புதிய முறையில் வாரத் தொடங்கினான். அநேகமாக மேனாட்டு உடைகளில் காட்சியளிக்கும் சுரேஷ், தற்போது பெரும்பாலும் வேஷ்டி, சட்டைகளையே அணியத் தொடங்கிவிட்டான். ராணுவப் பயிற்சி இருந்ததால் தனது வழக்கமான நடையையே மாற்றிக்கொள்ளும் திறன் இருந்தது அதனுக்கு. சேகரும் தன்னைப் பொறுத்த மட்டிலும் சற்று மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டான்.

புதிய முறை, சுரேஷோ, சேகரோ எங்கேயாவது வெளியூர் சென்றிருந்தாலும் ஊரில் அவர்கள் இல்லை என்ற சந்தேகத்தைப் பிறரிடமிருந்து மறைக்க நிச்சயமாக உதவியது. தங்கள் வழக்கமாகச் செல்லும், உலாவப்போகும் இடங்களையும் மாற்றிக் கொண்டனர் இருவரும்.

இந்தச் சமயத்தில்தான் கலெக்டரின் பதில் தந்தி வந்திருந்தது. ஒரு புதிய தெம்பு பிறந்திருந்தது அவர்களிடம். மேலிடத்தாரின் உதவி நிச்சயம் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களது உதவியுடன் தாங்களாகவே மேலும் இவ்விஷயத்தில் முன்னேற்றம் காணவேண்டுமென்பது இரட்டையரின் விருப்பம்.

மிகவும் ரகசியமான நீண்ட 'ரெகார்ட்' ஒன்றைத் தயார் செய்ய ஆரம்பித்தனர் இருவரும். சுரேஷ் குறிப்புகள் சொல்லச் சொல்ல, சேகர் தன் மணியான எழுத்தில் அழகாக ஒழுங்குபடுத்தி எழுதிக்கொண்டிருந்தான். பாதாள அறை, மர்மவார்த்தையில் ஆரம்பித்து, ராணுவப் படத்தைப் பிரதிசெய்தல், வொயிட்ரோஸ் கார்டன் பங்களா, அதன் சொந்தக்காரன், தரையில் படர்ந்து சென்ற செம்புக் கம்பி, ஜிம்மியின் காயம், மர்மக் கடிதம், சுருள் கத்தி, ஜிம்மியின் முடிவு யாவற்றையும் தொகுத்து நீண்ட சம்பவமாக எழுதிக்கொண்டேயிருந்தான் சேகர்.

மறு பிரதி ஒன்றை எடுத்து இரண்டிலும் இருவரும் கையொப்பம் செய்தனர். ஒரிஜினலுடன் தாங்கள் எடுத்த புகைப்படங்கள், மர்மக்கடிதம் இரண்டையும் ஒரு உறையிலிட்டு 'ஸீல்' செய்தனர்:

சுரேஷ் ஒரு தோல்பையுடன் திருச்சிக்குக் கிளம்பும்போது மாலை மணி ஐந்து.

ரெயிலின் கடும் வேகத்துடன் இழைந்து தற்போதுதான் அவன் தீர்மானம் உண்மையான விறுவிறுப்புடன் முன்னேறிக்கொண்டிருந்தது. திருச்சி ஜங்ஷனில் முன்னேற்பாட்டின்படி கலெக்டரின் கார் வந்திருந்தது. டிரைவர் சுரேஷை அடையாளம் கண்டுகொள்ளத் தவறிவிட்டாலும், சுரேஷ் அவனைப் புரிந்துகொண்டான் சுலபமாக. கம்பீரமாகப் புறப்பட்டது அந்தப்பெரிய வண்டி, சுரேஷை ஏற்றிக்கொண்ட பெருமையில்.

11. புதிர் அவிழ்ந்தது

புத்தம் புதிய அந்த நீல வண்ண வண்டி சத்தம் செய்யாமல் வேகமாகப் பறந்துகொண்டிருந்தது. ஜனசந்தடியுள்ள பெரிய பாதைகளிலும் திருப்பங்களிலும் அலட்சியமாக 'ஸ்டியரிங்' கை ஒடித்தான் டிரைவர். சற்று நேரத்தில் சந்தடியற்ற ராஜபாட்டையொன்றில் மிதந்துகொண்டிருந்தது கார்.

தூரத்தில் பிரசித்தி பெற்ற காஜா மலையும், 'ரேஸ் கோர்ட்'டும் தெரிந்தன. இருபுறமும் ஜில்லாத் தலைமை அதிகாரிகளின் பங்களாக் காம்பவுண்டுகளும் தென்பட ஆரம்பித்து விட்டன. ஆயிற்று....

கலெக்டரின் பங்களாவும் நெருங்கிக்கொண்டிருந்தது.

ஒரு திருப்பம்...

'சடக்'கென்று நின்றது கார்.

காரின் கதவு திறக்கப்பட்டதும் கம்பீரமாக எழுந்தான் சுரேஷ். வாசலில் அவனை வரவேற்பதற்காகக் கலெக்டர் நின்றுகொண்டிருந்தார். மாலை வணக்கம் செலுத்தியபின் அவரைத் தொடர்ந்து உள்ளே சென்றான் சுரேஷ்.

வழக்கமான உபசாரங்கள் முன்னே நடந்தன. சற்று நேரத்தில் 'டிபனை' முடித்துக்கொண்டு இருவரும் கலெக்டரின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தனர்!

* * *

"ராமகிருஷ்ண மிஷனின் தலைவர் உன்னைப் பிரமாதமாகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார், சுரேஷ்! எனக்குத்தான் ஆச்சரியமாயிருக்கிறது, உங்கள் சங்கம் எவ்வாறுதான் அந்த மாபெரும் தொகையைச் சேகரிக்க முடிந்ததோ என்று. உங்கள் மூளையை, கோல்டுஸ்மித் தம் ஆசிரியரைப் பற்றிக் கூறுவதுபோல ஒப்பிடலாம்" என்று மெச்சினார் கலெக்டர்.

"விஷயம் ஒன்றுமில்லை, ஸார். பல சந்திரன் ஒரே சமயத்தில் பிரகாசிப்பதுபோல் எங்கள் அழைப்பின் பேரில் உடனே சம்மதம் தெரிவித்துப் பிரபலமான நீச்சல்

நிபுணர்கள் போட்டியில் கலந்து கொண்டதுதான் இதற்குக் காரணம்'' என்று அடக்கத்துடன் கூறிக்கொண்டான் சுரேஷ்.

சுரேஷுக்கு உண்மையிலேயே பெருமையாகத்தான் இருந்தது! தன்னுடன் மிகவும் சகஜமாக மனம் விட்டுப் பேசும் அதிகாரி திரு. சுவாமிநாதன். எம். ஏ, ஐ. ஏ. எஸ். என்ற நினைப்பு வந்தாலும் வானத்திலேயே பறக்க ஆரம்பித்து விட்டான்.

ஆம். அவருக்குத்தான் எப்பேர்ப்பட்ட நல்ல பெயர்! ஜில்லா முழுவதும் எத்தனையோ சிவில் தகராறுகளைக் 'கோர்ட்'டுக்குக் கொண்டு செல்லாமல் தனது சாமர்த்தியத்தினாலும் வாக்குச் சாதுரியத்திலுமல்லவா அடக்கியிருக்கிறார். உண்மையிலேயே அவர் மிகவும் கெட்டிக்காரர். ஆனால். தம் பதவிக்குரிய மதிப்பையும் கௌரவத்தையும் அவர் அவ்வளவாக லட்சியம் செய்ததில்லையே! அந்த ஒரு காரணத்தினால் மட்டும் இரண்டும் இன்னும் அதிகமாகவே அவருக்குக் கிடைத்தன. மேலும் சுரேஷுடன் அவர் நெருங்கிப் பழகுவதற்குக் காரணங்களும் இருந்தன. அவனுடைய அபார அறிவில் மிகுந்த நம்பிக்கை இருந்ததுதான் அந்தக் காரணம்.

மெதுவாக விஷயத்திற்கு வந்தான் சுரேஷ். ''நம் ஜில்லாவில் ஒரு பெரிய சதிக் கூட்டம் நடைபெறுவதாகத் தங்களுக்குத் தகவல் கொடுப்பதற்கே வந்திருக்கிறேன்'' என்று ஆரம்பித்தான். கலெக்டரும் கவனம் செலுத்தினர். மேலும் அவன் தான் கொண்டு வந்திருந்த ஸீலிட்டக் கவரை அவரிடம் கொடுத்தான். சற்றுநேரம் கவரின் அமைப்பையே கவனித்துக் கொண்டிருந்த கலெக்டர் புன்முறுவலுடன் அரக்கு முத்திரையை உடைத்தார்.

அதனுள்ளிருந்து பெரிய கடிதத்தை வெளியே இழுத்தார். சற்று நேரம் சாதாரணமாக வாசித்துக்கொண்டிருந்த அவருடைய கண்கள் சிவக்க ஆரம்பித்தன. கைகளில் ஒரு வேகம் காணப்பட்டது. ''அடியோடு நசுக்குவோம் அவர்களை'' என்ற வார்த்தைகள் ஆங்கிலத்தில் வெளிவந்தன அவர் வாயிலிருந்து.

சில இடங்களைப் படிக்கும்போது அவருக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. சுருள் கத்திச் சம்பவத்தைத்தான் அவர் வாசிப்பதாகப் புரிந்துகொண்டான் சுரேஷ்.

ஜிம்மியைக் குறித்து வாசிக்கும்போது கண்களில் நீர் துளித்தது கலெக்டருக்கு. அதன் நினைவு வந்ததும் சுரேஷுக்கும் மனத்தை என்னவோ செய்தது. தன்னோடு எவ்வளவு பிரியமாக விளையாடியது அது! சிறு குழந்தையை நினைவுபடுத்தும் அந்த அழகிய ஜிம்மி இப்போது எங்கே?

கடிதத்தை முடித்ததும் போட்டோக்களைக் கவனிக்க ஆரம்பித்தார் கலெக்டர். யாவற்றையும் அரை மணியில் முடித்துவிட்டார் அவர். அவருடைய முகத்தில் தற்போது லேசாகக் கவலை படர்ந்திருந்தது.

அவரது வலதுகை டெலிபோனை நெருங்கியது. கையிலிருந்த பென்சிலின் அடிப்பாகத்தை டயல் துவாரங்களில் விட்டு இருமுறை திருப்பினர் கலெக்டர். ரிஸீவரை எடுத்தார்.

பேசுவது ஜில்லா போலீஸ் கண்காணிப்பாளர் மிஸ்டர் மாத்யூஸ் அவர்கள்தான் என்று அறிந்து கொண்டான் சுரேஷ். ஏதோ ஒரு ஐரோப்பிய மொழியில்தான் பேசிக்கொண்டனர். சுரேஷுக்குப் பேச்சின் சாரம் ஒன்றும் புரியவில்லை. ஐந்து நிமிஷ சம்பாஷணைக்குப் பின் ரிஸீவரைக் கீழே வைத்த கலெக்டர் சுரேஷிடம் திரும்பி, ''ஒன்றுமில்லை, முக்கியமான விஷயம் இருப்பதாகவும், உடனே வரும்படியும் டி. எஸ். பி. க்குத் தகவல் கொடுத்தேன்'' என்று கூறிவிட்டு மேலே தொடர்ந்தார்.

''நீங்கள் நினைப்பதுபோல் இந்த இருபது நாளும் வீண் அல்ல. நியாயமான காரியத்தையே நீங்கள் செய்திருக்கிறீர்கள். உண்மையான உழைப்பும் முன்னேற்றமும் கண்டிருக்கிறீர்கள். இதுவரை போலீஸில் தகவல் கொடுக்காததும் ஒரு விதத்தில் மிகச் சிறந்த செயலே. வீண் விளம்பரம் ஏன்? இரண்டு

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

பே. ஜீவரத்தினம், காவேரிப்பட்டணம்

கே: என் தங்கைக்குத் தாங்கள் ஒரு பெயர் வைக்கவேண்டும் என்பது என் ஆவல். என்ன பெயர் வைப்பீர்கள்?

ப: உங்கள் ஊரிலேயே காவேரி என்ற நல்ல பெயர் ஒளிந்துகொண்டிருக்கிறதே!

ரா. கிருஷ்ணசாமி, கூந்தலூர்

கே: நீங்கள் எங்கள் ஊருக்கு வந்தால் என்ன?

ப: திருப்பதிக்குப் போன பின்பு வரவேண்டுமோ?

என். கண்ணன், மாயூரம்

கே: நயா பைசாவினால் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஏற்படக்கூடிய இன்னல்கள் யாவை?

ப: பைசா பெறாத இன்னல்களாக இருக்கும்.

வே. திருஞானம், வல்லம்

கே: எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் நன்மை உண்டா?

ப: உண்டு. கொதிப்பைத் தணிக்கிறது. மயிர்க்கால்களில் படிந்த அழுக்கைக் கரைத்துப் போக்குகிறது.

ந. சு. இலக்குமணன், சங்ககிரி

கே: சைனா சு. சூவில் ஒரு நாய் வரப்போவதாகக் கூறினீர்களே. முடிவு வரை வரவில்லையே. ஏன்?

ப: முதலில் வேறு மாதிரியாக எழுத வேண்டும் என்று எண்ணினேன். அந்த உயர்ந்த ஜாதி நாய்க்கு வேறு ஒரு கதையில் இடம் கொடுக்கலாம் என்று கதையை எழுதும்போது மாற்றிவிட்டேன்.

எஸ். பி. ராமநாதன், உலப்பனை (இலங்கை)

கே: நீங்கள் உங்கள் ஓய்வு நேரத்தை எப்படிக் கழிக்கிறீர்கள்?

ப: அப்படி ஒரு நேரம் என்று நான் தனியாகச் சிருஷ்டித்து வைத்துக் கொள்ளவில்லை. வேலை செய்து களைத்துப்போனால் ஓய்வு. ஓய்வு கிடைக்காதபோது வேலை.

ஏ. ஆர். ரங்கராஜன், திருச்சி-2

கே: U. S. I. S. என்றால் என்ன பொருள்?

ப: யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்பர்மேஷன் சர்வீஸ். ஐக்கிய அமெரிக்கச் செய்தி ஸ்தாபனம் என்று பொருள்.

தில்லை நெடுமாறன், நடராஜபுரம்

கே: 'தமிழ் நாடு' என்று சென்னை ராஜ்யத்துக்குப் பெயரிடுவதைத் தாங்கள் விரும்புகிறீர்களா? வெறுக்கிறீர்களா?

ப: 'தமிழ் நாடு' என்று பெயரிட்டால் அழகாகத்தான் இருக்கும். ஆனால் முதலில் அதைத் தவிர வேறு ஒன்றுமே பிரச்னைகள் இல்லை என்பதுபோலக் கிளர்ச்சியாகச் செய்வதை நான் விரும்பவில்லை.

மு. கிருஷ்ணன், பெங்களூர்-8.

கே: மனிதனுக்குக் கிடைக்காத பொருள்?

ப: இறவாமை.

கே: அமைதிக் குரியது எது?

ப: தனிமை.

கே: அழிவுக்குரியது எது?

ப: பொறாமை.

எஸ். நைஜாம், அரவாக்குறிச்சி
கே: இப்பொழுதுள்ள மந்திரிகளில் சிறந்த பேச்சாளர் யார்?
ப: கல்வி யமைச்சர்.

தி. பாலசந்திரன், கடம்பத்தூர்
கே: மனித சமுதாயத்தின் விரோதி யார்?
ப: அறியாமை அரக்கன்; அணுக்குண்டைவிட மோசமானவன்.

ஸி. ராமசாமி, காரைக்குடி
கே: மனச்சாட்சி இல்லாத மனிதனை எதற்கு ஒப்பிடலாம்?
ப: சுளையில்லாத பலாப்பழத்துக்கு ஒப்பிடலாம்,

கி. தேவராஜன், வைரிசெட்டிப் பாளையம்
கே: என் சொந்த முயற்சியால் எழுதியவற்றை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பினாலும் பதிலும் இல்லை; வெளியிடுவதும் இல்லை. என்ன காரணமாக இருக்கும்?
ப: உன் சொந்த முயற்சியைப் பின்னே எப்படிச் சோதிப்பது?

ஆர். உமா பார்வதி, வளவனூர்
கே: புளூட்டோ என்பது ஒரு கிரகமா, நட்சத்திரமா?
ப, கிரகம்.

ஸி. சுப்பையா, மதுரை
கே: எங்கள் மதுரையைப்பற்றித் தங்கள் கருத்து யாதோ?
ப: அந்த 'லக்கு'க்கு நான் அடிக்கடி வந்ததில்லை.

பழ. ஞானம், வேந்தன்பட்டி
கே: படித்த ஆண் மகனுக்கும் படித்த பெண் மகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஒற்றுமை என்ன?
ப: படித்த ஆண் மகன் வேலை தேடி அலைகிறான்; படித்த பெண் மகள் அதற்குப் போட்டி போடுகிறாள். இது வித்தியாசம். ஒற்றுமை; மீசை.

அ. ரெ. மீனாக்ஷிசுந்தரம், தென்காசி
கே: ஒரு மாணவனுக்கு வேண்டியது....
ப: சினிமாவுக்குக் காசு கொடுக்க மறுக்கும் அம்மா, கண்டிப்பான தந்தை, மாணவனின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் ஆசிரியர்.

கே. பி. காசிம், நாகர்கோயில்
கே: காஷ்மீர் பிரச்னை எப்படி இருக்கிறது இப்போது?
ப: ரொம்ப 'ஜாரிங்'காக இருக்கிறது!

ஆ. துரைக்கண்ணு, உப்பிலிப் பாளையம்
கே: ஐயா ஆர்வியாரே! நீர் துப்பறியும் கதைகள் எழுதுவதுண்டா? குறும்பான பதில் வேண்டாம்; கரும்பான பதில் வேண்டும்.
ப: அது என்னிடம் கைவச்மில்லை.

ஆர். தேவராஜ், பொள்ளாச்சி.
கே: டுடோரியல் காலேஜில் சேர்ந்து படிப்பதனால் பலன் உண்டா?
ப: ஒடிந்த கையை ஒட்ட வைப்பதுபோலத்தான். கையை ஒடித்துக் கொண்டவர்கள் ஒட்டவைத்துக் கொண்டுதானே ஆகவேண்டும்?

வி. எஸ். விசுவநாதன், திருக் காட்டுப்பள்ளி.
கே: மோட்டாரில் இருக்கும் ரேடியோ எப்படிப் பாடுகிறது, அன்பரே? சிறிது விளக்குங்களேன்!
ப: வீட்டிலிருக்கும் ரேடியோ எப்படிப் பாடுகிறதோ அப்படியே தான் தம்பியாரே, புரிந்து கொள்ளுங்கள்.

ரா. சி. ராசன், சோலையார் பேட்டை.
கே: நாம் பிற நாடுகளுக்கு அனுப்பக்கூடிய பொருள்கள் எவை?
ப: முக்கியமானது ஒன்றுதான் இப்போது. ராஜீய தூதர்கள்.

கி. கலியபெருமாள், ஆக்கூர்
கே: ரஷ்யா தேவலையா, அமெரிக்கா தேவலையா?
ப: ஆயுத பலமோ, வசதிகளோ இல்லாத நாடுகளை அடக்கிக் கைக்குள் போட்டுக்கொள்வதில் இரண்டுமே முனைந்திருக்கின்றன. குடியிருக்கும் கூரையைக் கொளுத்துபவன் தேவலையா, அடுத்திருக்கிற போரைக் கொளுத்துபவன் தேவலையா, சொல்லேன், பார்ப்போம்.

புதுமைப்பித்தன், பட்டுக்கோட்டை

கே: கண்ணகி, மாதவி இருவரில் கற்பில் சிறந்தவர் யார்?

ப: பெயரைப் பார்த்தால் ஒரு மாதிரியாக இருக்கிறதே என்று பார்த்தால் மிகவும் பழைய விஷயமாகக் கேட்டிருக்கிறாயே! புதுமைப்பித்தன் என்று சிறந்த எழுத்தாளர் ஒருவர் இருந்தார். உன் பெயர் புனைபெயராக இருந்தால் இதை மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் புதுமையாக நீ ஒன்று செய்ய வேண்டாமா?

கே: கலைஞன் யார்? அவன் எப்படிப் பட்டவன்?

ப: அவனும் மனிதன்தான். அழகே உண்மை; உண்மையே அழகு என்பதை எவனால் மிகவும் வன்மையாக வெளிப்படுத்திக் காட்ட முடியுமோ, அவனே சிறந்த கலைஞன்.

டி. தனஞ்சயன், நாங்குநேரி

கே: எழுத்தாளன் ஆவது எப்படி?

ப: அது இந்தக் காலத்தில் வெகு சுலபம். சந்தாக் கட்டினால் ஆகிவிடலாம்.

வி. சரஸ்வதி, சென்னை-4.

கே: பச்சைப் பால் உடம்புக்கு நல்லதா, காய்ச்சிய பால் உடம்புக்கு நல்லதா?

ப: காய்ச்சிய பால்தான். பாலில் ஒன்றுக்குப் பாதி தண்ணீர் கலந்து, தண்ணீர் வற்றும்மட்டும் காய்ச்சிக் குடிப்பதுதான் உடம்புக்கு நல்லது.

கே. எஸ். ராஜாமணி, குடந்தை.

கே: சர்வோதயம் என்கிறார்களே, அப்படி என்றால் என்ன?

ப: சமூக லட்சியம்தான் சர்வோதயம். தானும் சிறப்பாக வாழ்ந்து, பிறரையும் சிறப்பாக வாழவிடுவது தான் சமூக லட்சியம்.

ஆர். ராமன், பட்டுக்கோட்டை.

கே: முன்பு இரண்டு கேள்விகள் கேட்டிருந்தேன். அதற்கு நீங்கள் பதில் தரவில்லை. உங்களுக்கு விடை தெரியாததால்தான் பதில் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். அப்படித்தானா?

ப: இல்லை; உன்னுடைய விடைகளுக்கு நான் கேள்வி தயாரிக்க விரும்பவில்லை.

வே திருஞானம், வல்லம்.

கே: கலைக்கும் கொலைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: ஒரு கொம்பும் காலுந்தான்; இந்த நாட்டிலே பலர் கலைகளைக் கொலை செய்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாட்டிலே பலர் கொலைகளைக் கலையாகச் செய்கிறார்கள்.

எஸ் பரசுராமன், கொள்ளிடம்.

கே: கண்ணன் அட்டைப் படம் கலர் போட்டோவா, அல்லது போட்டோ எடுத்துக் கலர் செய்வதா?

ப: போட்டோவைக் கலர் செய்வதுதான்.

வி. பாலகிருஷ்ணன், தஞ்சை.

கே: எங்கள் சங்கத்தின் சார்பில் எனக்குத் தங்கள் போட்டோ ஒன்று அனுப்பி வைப்பீர்களா?

ப: தபால் ஆபீஸ்களிலும் ரெயில்வே புக்கிங் ஆபீஸ்களிலும் வெளியே தொங்கவிட்டிருக்கிறார்களே, அதைப்போல் உங்கள் சங்கங்களில் என் படம் தொங்குவதை நான் எப்படிச் சகிப்பேன்?

இ. கே. சீனிவாசன், எழும்பூர்.

கே: என் கையெழுத்துக்களிலிருந்து என்னைப் பற்றி ஏதாவது ஊகிக்க முடிகிறதா?

ப: முடிகிறது. சதா உன்னைப் பற்றியேதான் உனக்கு ஞாபகம். உன்னைச் சுற்றி நடப்பவைகளை அறிய முயல்வதற்கு இந்த ஞாபகம் பெரிய தடையாகும்.

ப. கண்ணன், தஞ்சாவூர்.

கே: சென்னை ராஜ்யத்தில் உள்ள ஜில்லாக்கள் எவை?

ப: செங்கல்பட்டு, தென்னார்காடு, வடஆர்க்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை, சேலம், நீலகிரி, கன்னியாகுமரி (இப்போது

இதைத் தனி ஜில்லாவாக வைப்பதா வேறு ஜில்லாவோடு இணைத்து விடுவதா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.)

இல. தமிழடியான், கிருஷ்ணகிரி.

கே: சிறந்த எழுத்தாளர்கள் என்பவர் யார்?

ப: அதிகம் பேர் படிக்கக் கூடிய படி எழுதுபவர் என்று சொல்வதற்கில்லை. அதிக நாள் மனத்தில் நிலைக்கக் கூடியபடி எழுதுபவர் தான்.

ப. ஷண்முகசாமி, கணவாய்ப் பேட்டை.

கே: பொய் வெல்லும்போது—?

ப: உண்மை பொறுத்திருக்கிறது.

மா. அருணாசலம், வல்லம்.

கே: கலம் பல கட்டி கடலாண்ட தமிழன் இன்று கைகட்டி நிற்பதேன்?

ப: விஞ்ஞான அறிவை வேண்டாம் என்று விலக்கி, அடுக்குமொழி அறிவில் அமிழ்ந்திருப்பதால்தான் என்று நினைக்கிறேன்.

ச. அ. சின்னையன், சம்பை.

கே: உலகிலேயே அழகில் சிறந்த தீவு எது?

ப: தென் பசிபிக்கிலுள்ள ஹாவாய்த் தீவுகள்.

பி. கோபிநாதன், ஆம்பூர்.

கே: விவசாயி, தொழிலாளி இவர்களில் சிறந்தவர் யார்?

ப: வலக்கண், இடக்கண் இவற்றில் சிறந்தது எது?

ஏ. எஸ். மகாலிங்கம், பட்டுக் கோட்டை.

கே: ஐ. நா. ஸ்தாபனத்தின் அமைப்பு எப்படி?

ப: ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆறு முக்கிய உறுப்புக்கள் கொண்டது. (1) பொதுச் சபை (2) பாதுகாப்புக் கவுன்சில் (3) பொருளாதார-சமூக கவுன்சில் (4) தர்ம கர்த்தா சபை (5) சர்வதேச நீதி மன்றம் (6) தலைமைக் காரியாலயம் பல தேசங்களின் பிரதிநிதிகள் இவற்றில் அங்கம் வகித்து உலக சுபிட்சத்துக்காக பாடுபடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எஸ். எம். குமார், ஸ்ரீவல்லிப் புத்தூர்.

கே: மகாபாரதத்தில் வரும் தர்ம புத்திரருக்கு முன்பே ஓர் அரசன் சூதாடி அரசிழந்திருக்கிறுனமே? அந்த அரசன் யார்

ப: நிடத நாட்டு அரசன் நளன்.

ம. ராஜண்ணன், பாலக்கோடு.

கே: நீங்கள் வெறுப்பது எதை?

ப: அசட்டுத்தனத்தை.

ராசு, கல்லிடைக்குறிச்சி.

கே: உலகிலேயே இன்றுள்ள மிகச் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் இவர்களில் தனித்தனியே மூவரைக் குறிப்பிடவும்.

ப: சிறந்த பேச்சாளர்கள்: வின்ஸ்டன் சர்ச்சில், ராதா கிருஷ்ணன், வி. கே. கிருஷ்ண மேனன். சிறந்த எழுத்தாளர்கள்: ராஜாஜி, ஸர்மெர்ஸெட்மாம், முல்க்ராஜ் ஆனந்த்.

வை. பி. ஜயராமன், சிவகாசி.

கே: உங்கள் சொந்த ஊர்?

ப: யாதும் ஊரே யாவரும் கேளிர்!

செ. பழனியப்பன், ஐயம்பாளையம்.

கே: டெலிபிரிண்டர் எப்படி வேலை செய்கிறது?

ப: தந்தியின் தத்துவம்தான் டெலிபிரிண்டருக்கும். பெரிய நகரங்களில் டெலிபிரிண்டர் யந்திரங்கள் இருக்கின்றன. செய்தி கொடுக்கும் ஆபீஸில் மின்சார டைப் அடிக்கும் கருவி ஒன்று இருக்கிறது. அதில் சாதாரண டைப் ரைட்டர் யந்திரம் எழுத்துக்களை அடிப்பதுபோல் அடித்தால், மின்சாரக் காந்த சக்தியின் மூலம் செய்தி வாங்கும் ஆபீஸிலுள்ள யந்திரக் கருவியில் சுற்றியிருக்கும் நாடா போன்ற காகிதச் சுருளில் செய்தி உடனுக்குடனே பதிவாகிறது.

அச்சக விளம்பரம்

'மகா சனங்களே!

எங்கள் அச்சகத்தில் அளகாகவும் நேர்தியாகவும் பிழையில்லமாலும் அச்சொடித்துக் கெடுக்கப்படும்.

அரோகரர அச்சம்.

—கே. வி. ராமன், கரிவலம்வந்தநல்லூர்.

அன்னைத் தெய்வம்

அன்புத் தெய்வம் நீயே - என்னை
அணைக்கும் தெய்வம் நீயே!
உண்மைத் தெய்வம் நீயே - அமுது
ஊட்டும் தெய்வம் நீயே!
பெற்ற தெய்வம் நீயே - என்னைப்
பேணும் தெய்வம் நீயே!
உற்ற தெய்வம் நீயே - என்றன்
உரிமைத் தெய்வம் நீயே!
எல்லாத் தெய்வமும் தாயே - வணங்க
ஏற்ற தெய்வமும் தாயே!
நல்ல தெய்வமும் தாயே - குழவி
நாடும் தெய்வமும் தாயே!

—கே. சொங்கலிங்கம், குதிரைக்குளம்.

ஒரு துணுக்கு

மாமா தங்கத்துக்குக் கணக்குப் போட உதவி செய்ய வந்தார். "இதோ பார், என்னிடம் பத்து மாம்பழம் இருக்கு. இதிலே இரண்டை சின்னப் பாப்பாவுக்குக் கொடுத்துவிட்டேன். அப்படியானால் மீதி என்னிடம் எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டார்.

"அந்த மாம்பழக் கணக்கெல்லாம் தெரியாது. எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை, மாமா. எங்களுக்கு வாழைப்பழக் கணக்குத்தான் தெரியும்!" என்றாள் தங்கம். —சுமி, சென்னை-8.

மாதம் மும்முறை

கண்ணனை மாதம் மும்முறையாக்கி, இன்னும் சீக்கிரமாகக் கிடைக்க வழி செய்யக் கேட்டுக் கொள்கிறேன். —ந. சு. இலக்குமணன், சங்ககிரி.

ஒரு வேண்டுகோள்

கண்ணன் அண்ணாவுக்கு, அடிக்கடி மின்சாரக் கருவிகள் செய்யும் விதம் போன்ற கட்டுரைகளை வெளியிடுங்கள்.

—வே. ரமணன், கொடுமுடி.

ஒரு கதை

மணிக்குப் பொழுது போகவில்லை. அவனுடன் விளையாட ஒருவரும் இல்லை. அவனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. அம்மாவைக் கேட்டான். ஏதாவது படிக்கச் சொன்னாள். லீவு நாட்களில் மணிக்குப் படிக்கப் பிடிக்கவில்லை. எதிர் வீட்டுக்கு ஒரு பையன் வந்தான். மணி அவனைச் சிநேகம் பிடித்துக் கொண்டான். விளையாடினான். பொழுதுபோயிற்று. ஆனால் அந்தப் பையன் சில நாட்களில் ஊருக்குப் போய்விட்டான். மணிக்கு மறுபடியும் பொழுது போகவில்லை. யாரோடு விளையாடுவது? அம்மாவுக்கு அப்போது ஒரு பாப்பா பிறந்தது. அழகான பாப்பா. ஆண்பிள்ளைப் பாப்பா. அதைப் பார்த்ததும் மணிக்குச் சந்தோஷம் வந்தது. அவனுக்கு அப்படி ஒரு பாப்பா இருந்தால் தேவலைபோல இருந்தது. விளையாட விட்டிலேயே ஒரு பாப்பா வந்து விட்டான். அப்புறம் மணிக்குப் பொழுது போயிற்று. கதை தேவலையா?

—என். எஸ். மோகன், பம்பாய்-22.

'எமலோகம்' போக!

''ஏண்டா அழறே?''

''அம்மா என்னை விட்டு விட்டு எமலோகம் போயிட்டாப்பா?''

''எமலோகமா? என்னடா உளர்றே?''

''நான் முன்னாலே போறேன். நீ வந்ததும் உன்னையும் அழைச்சிண்டு வரச் சொல்லிவிட்டுப் போயிட்டா அப்பா!''

''என்னையுமா? எமலோகத்துக்கா?''

''ஆமாப்பா, ஆறு மணி ஆட்டத்துக்கு!''

—ஏ. சீனிவாசன், சென்னை-4.

* * *

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

கூபன் நெ. மே. 1-'57

பரீட்சை தேறுவது எப்படி?

'பரீட்சையில் தேறுவது எப்படி?' என்ற புத்தகம் ஒன்றை ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிப் படித்தேன். நன்றாக இருக்கிறது. ஆசிரியர் சம்பந்தம் எழுதின புத்தகம் அது. மாணவர்களுக்கு உபயோகமான பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். எல்லாரும் படிக்கலாம் என்று சிபாரிசு செய்கிறேன். வானதி பதிப்பகத்தார் சென்னை 17 அதை வெளியிட்டிருக்கிறார்கள்.

—விமலா, சேலம் டவுன்.

* * *

அட்டைப் படம்

அட்டைப் படம் அழகாயிருந்தால் மட்டும் போதாது. நல்ல கருத்துக்களையும் எடுத்துக் கூறும்படி இருக்கவேண்டும்.

—உதயசூரியன், கொல்லுமாங்குடி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன்

சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்திரப் போட்டி ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம்.

இந்தப் போட்டியில்—

★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவரையுள்ளவர்கள்தான் கலந்துகொள்ளலாம்.

★ படங்கள் அனுப்புபவர்கள் தொடர்ந்து மூன்று இதழ்களில் வெளிவரும் கண்ணன் கழகக் கூப்பன்களில் மூன்றைப் பூர்த்திசெய்து படங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே பக்கத்தில் வரையப்பட்டிருக்கவேண்டும்.

★ படங்களுக்கு உங்களுக்குப் பிடித்தமான, பொருத்தமான தலைப்பை நீங்களே கொடுக்கவேண்டும்.

★ வர்ணப் படங்கள் அனுப்புபவர்கள் வாட்டர் கலர் பெயிண்டைதான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.

★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்பலாம்.

★ ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் படங்களை எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் - கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசீலனை செய்வார்கள். இந்தப் போட்டி சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களுக்குப் பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் படாத படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வைத்திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்றவை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மானம் உண்டு.

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஜூலை 15-ஆம் தேதி இதழில் வெளியாகும்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

(Regd, as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542